# வருண குலாதித்தன் மடல்

பதிப்பாசிரியர்

ராய. சொ.

★

# காந்தியும் வள்ளுவரும்

வள்ளுவர் வகுத்த அறங்களை, அவ்வகையே நடத்திக் காட்டினார் மகான் காந்தியடிகள். ஓரோவிடத்து, வள்ளுவர் அருளிக் கூறிய வாக்குப் பொய்த்து விடும்படியும் செய்திருக்கிறார்.

வள்ளுவர் உலகுக்குச் சட்டம் வகுத்தார். அதற்கு உரையாகவும், உலகுக்கே ஒரு எடுத்துக் காட்டாகவும், காந்தியடிகள் நம் கண் முன்னே நடந்து காட்டினார்.

வள்ளுவர் குறள் வெண்பாவின் பிற்பகுதியாகக் கொண்டு, முற்பகுதியைப் புதிதாகப் பாடி அமைக்கப் பெற்றது இந்நூல்.

ஆசிரியர்: ராய. சொ.

விலை ரூ. க-அ-0

★

# மதிப்புரைக்கு

# வருண குலாதித்தன் மடல்

பதிப்பாசிரியர்

ராய. சொ.

விலை ரூபாய் ஒன்றரை.

கிடைக்குமிடம் :

*பாரதி பிக்சர் பாலெஸ்,*

காரைக்குடி.

Printed at South India Press, Karaikudi
R/10 22-3-48 Copies 1000.

# நூல் முகம்

மடல் என்பது பிரபந்த வகைகளுள் ஒன்று. மடல் என்றால் என்ன என்பதைச் சொல்ல வேண்டு மல்லவா? மடல் என்ற சொல் இங்கு பனைமரத்தின் மட்டையைக் குறிக்கிறது.

பண்டைக் காலத்தில் ஒரு முறை இருந்ததாகக் கூறப்படுகிறது. ஒரு பெண்ணின் அழகில் முழுதும் ஈடுபட்டு, அவளை அடையவில்லையானால் வாழ்க்கையே பாழாகிவிடும் என்ற நிலையை ஒருவன் அடைந்துவிடுவானானால், அந் நங்கையை அவன் பெறுதற்குரிய ஒரே வழி - கடைசி வழி - மிகப் பெரிய சங்கடமான வழி மடல் ஏறுதல் என்பது. ஒருவன் ஒருத்தியைக குறித்து மடலூர்ந்து முடித்தானானால் அவள் அவனுககுக் கிடைத்தற்குரியாள் என்பது அககால வழக்காம்.

மடல் ஊர்தலாவது பனைமட்டைகளால் ஒரு குதிரை வடிவுசெய்து அதன் மீது குறிப்பிட்ட பெண்ணொருத்தியை விரும்புபவன் ஏறி, ஊரறிய வீதிவலம் வந்து மானத்தை அறவேவிட்டு இது இன்னார் பொருட்டு என்பதை விளம்பரப்படுத்துதல் ஆகும்.

“தருணமயல் தீர்வேன்; பலர் காணத் தென் நாகை வீதியிற் சென்று ஊர்வேன் பனைமா உகந்து” என இவ் வருண குலாதித்தன் மடல் இறுதியில் கூறப்படுகிறது. ‘நாகைப் பட்டின வீதியிலே சென்று பனைக் குதிரை ஏறி மகிழ்ந்து பலருங் காண என் ஆசையை நிறைவேற்றிக்கொள் வேன்’ என்பது இதன் பொருள்.

மானத்தை ஆபரணமாகக் கொள்ளவேண்டிய மனிதன், மானம் துறப்பதில் இவ்வளவு துணிவென்பது எளிதில் நடக்கமுடியாதது என்று கருதியே இக் கடின முறை கொள்ளப்பட்டது போலும்! இருந்தாலும் இன்றைய அறிவு இம் மடல் முறையை ஏற்க மறுக்கின்றது.

மடல் ஏறுதல் பற்றி ஆசிரியர் வள்ளுவர் கூறுகின்றார். காமத்துப் பாலில், நாணுத் துறவு உரைத்தல் என்ற அதிகாரத்தில், மடல்பற்றி ஆறு குறள்களில் கூறப்படுகிறது. மடல் ஊருஞ்செயல் ஆண்களுக்கேயன்றிப் பெண்களுக்குரிய தன்று என்பது வள்ளுவர் கருத்து. ஒரு பெண்ணையடைய விரும்பி, மடல் ஏறும் ஆணைப்போல, ஒரு ஆணைப் பெற விழைந்து மடல் ஏறும் இயல்பு பெண்ணுக்கு இல்லை எனப் பேசுகின்றார் வள்ளுவர்.

" காமம் உழந்து வருந்ினார்க்கு ஏமம் மடல் அல்லது இல்லை வலி " என்று மொழிந்த புலவர் பெருமான், " கடலன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப் பெண்ணில் பெருந்தகக தில் " எனப் பேசுகின்றார்.

காமத்தால் தாக்கப்பட்டு அலைவார்க்குப் பாது காப்பாவது மடலைத் தவிர வேறில்லை என்பது முதல் குறள் கருத்து. ஆனால் கடல் போன்ற பெருங்காம வயப்பட்டாலும் மடல் ஏறமாட்டாத பெண் இனத்தைவிடப் பெருந் தகுதி வாய்ந்த பிறப்பு எதுவுமே இல்லை என்பது இரண்டாவது காட்டிய குறளின் கருத்து. இதனால் என்னதான் நேர்ந்தாலும் ஆணைப்போல் மானத்தை விற்கப்

பெண் துணியமாட்டாள் என்பது வள்ளுவர் கருத்தாகின்றது.

திருமங்கை ஆழ்வார் என்னும் பரமபக்தர் இம் முறையில் வழுவியிருக்கின்றார். அவர் பெண்ணாக இருந்து மடல் ஏறுகின்றார். கட்வுளை நாயகனாகக் அவனை அடைய அவனைக் காதலித்த நாயகியாகிய தான், மடல் ஊர்வதாகக் கற்பனை செய்கின்றார் மங்கை மன்னர். அது இறை அன்பைக் காதல் வழியில் காட்டும் ஒரு முறை. ஆணாகிய அவரே கற்பனைப் பெண் ஆகின்றார் அன்றி அவர் உண்மைப் பெண் அல்லாதலின் வள்ளுவனார் பெண்மைச் சிறப்பை மங்கை மன்னர் கெடுத்துவிட்டார் என்று கொள்ளவேண்டாம். திருமங்கையார் பாடிய சிறிய திருமடல் பெரிய திருமடல் என்ற இரண்டு மடல்களும் வடித்த சுவை உடையன. நிற்க,

வருண குலாதித்தன் மடல் என்பது தமிழ் நாட்டின் பழம் பெரும் கடல் துறைப் பட்டினங்களுள் ஒன்றான நாகை நகரில் நல்வாழ்வு வாழ்ந்த காத்தான் என்கின்ற வருணகுலாதித்தனைப் பாட்டுடைத் தலைவனாககொண்டு பாடப்பட்ட ஒரு நூல். இந் நூல் நானூற்று எழுபது கண்ணிகள் கொண்ட கலிவெண்பாவால் ஆக்கப்பெற்றது. நூல் அருமையாக அமைந்திருக்கிறது. நூல் முழுதும் கற்பனை மயம். நயமான உயர்ந்த சொற்களும் வருணனைகளும் கருத்துக்களும் எங்கும் பரவி வைர மணிகள் போல் மின்னுகின்றன. ஆனால், இதனை ஆக்கிய ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. பழைய சில

பதிப்புகள் பிழை மயமாகக் காணப்படுகின்றன. இந் நூலுக்குத் திருந்திய நல்ல பதிப்பு ஒன்று இதுகாறும் இல்லை. எனவே இதனைப் பதம் பிரித்து விளக்கம் எழுதி வெளியிடுகின்றேன்.

இந் நூலில் ஒரு நங்கை அடிமுதல் முடிவரை நன்கு வர்ணிக்கப்படுகின்றார். பிறகு பாட்டுடைத் தலைவனாகிய வருண குலாதித்தனின் தசாங்கம் சிறப்பித்துக் கூறப்படுகிறது. அதன்பின் காட்சி; அதாவது அம் மெல்லியலைக் கண்டு மையல்கொள் ளும் நிலை. கண்களிற்கண்ட அவளோடு ஏதேதோ பேசுகின்றான்; பிதற்றுகின்றான் அவன். அவள் பதில் பேசவில்லை. அந் நங்கை "புன்முறுவல் செய் தருளிப் போயினார்." அன்னாள் "சிங்காரப் பின்னழு கும் சேவி"த்து, அவள் "மண்ணிலே தோய அடி வைத்த சுவடு அத்தனையும் கண்ணிலே ஒற்றி ஒற்றிக் காமுற்றான்" அவன்.

அவ் அழகி "பூங்காவில் வந்த புதுமை" அவன் "கண்ணைவிட்டு நீங்காமல்" அன்னான் "உள்ளறிவு" நீங்கப் பெற்றான். அவள் சென்றுவிட்டாள்; அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தளர்ச்சி காரணமாக, சிறிது கண் அயர்ந்துவிட்டான். அந் நிலையில் "நெஞ்சில் கருணையிலா நிட்டூரி யார்தம்மை வஞ்சக் கனவில் வரக" கண்டான் காமுகன். "செஞ்சிலம்பு - கொண்ட இருதாள் மலரைக் கும்பிட்"டான். திரும்பவும் புலப்பம் கனவில். கனவில் அம் மாது "திருவாய் மலர்ந்து நகைசெய்" யக் காண்கின்றான்; கனவிலே அனுபவிக்கின்றான்; "இந்த்ர பதம் பெற்றவர்போல் இன்புற்று" அது கனவென்று அறியாமல் விழித்தான்.

அவ்வளவுதான்; காணவில்லை தன் அருமைப் பெண்ணை. "சோலையெலாம் தேடி"னன்; சுற்றினன்; எங்கும் காணேம். ஒன்றும் புரியவில்லை அவனுக்கு. "ஐயோ! கனவா? விழித்துக் கெடுத்துவிட்டேனே" என்று ஏங்கினன். காடும் மலையும் அவளாகத் தோற்றியது அவன் கண்களுக்கு.

அப்பொழுதுதான் அவன் உய்வுக்கு ஒரு நினைவு தோன்றுகிறது. அதுதான் மடலேறும் வழி. மடல்பற்றி மங்கையைப் பெறலாம் என்றுசொன்ன வள்ளுவரை வாயார வாழ்த்துகின்றான். "காமம் உழந்து கலங்கி வருந்திஞர்க்கு ஏமம் மடலல்ல தில்லை வலி - ஆமெனவே", சொன்ன திருவள்ளுவரைத் தோத்திரம் செய்தேன் கருத்தில், உன்னிமடல் ஊர்தற்கு ஒருமித்தேன்" என்று கூறி மடற்கோலம் பூண்டு, அவள் திருவுருவை எழுதி எடுத்து "நற்றமிழ் நூல் சேரும் வருணகுலாதித்தன் செழுங்கனகத் தாருவெனும்" "நாத்தான் இரண்டுரையா நாகரிக"ஞை நாகையர்கோன் திருமுன்னர் அவன் தென் நாகைப்பதியின் திரு வீதியில் பனைக் குதிரைமடல் ஏறத்துணிந்தே விட்டான்.

இந்நூல் சொற்சுவை பொருட்சுவை பெரிதும் கொண்டது. எடுத்து இங்கு விரிப்பின் முன்னுரை பெருகிவிடும் என்று விடுக்கின்றேன். அவ் இன்னமுதை நூலினுள் கண்டு பருகி மகிழ்க! ,

காந்தி ஆண்டு எகூ.
பங்குனி - கூவ

ராய. சொ.

# வருண குலாதித்தன் மடல்.

## விநாயகன் வணக்கம்

*மாதுபுணர் காத்தான் வருணகுலா தித்தனைச்சென்று
ஓது தமிழாம் உலாமடற்குச் - சூதுமிகர்
சந்தமுலைச் சந்தரநுதற் சங்கரிபுத்திரன்கருணைக்
கந்தமதத் தந்திமுகன் காப்பு.*

## முருகன் வணக்கம்

*எங்குமுள்ள வர்ணனைகள் எல்லாம் எடுத்தாய்ந்து
மங்கையரின் சிங்காரம் வாழ்த்தியே - எங்கள்
வருணகுலா தித்தன் மடல்பாடு தற்குக்
கருணைபொழி ஆறுமுகன் காப்பு.*

## பாட்டுடைத் தலைவன் சிறப்பு

*கருணைமுகி லானகொடைக் காத்தான்தென் நாகை
வருணகுலா தித்தன் மகிழ்ந்தால் - அருணமலர்ச்
செங்கைகளெங்கும் சங்குதங்கும் திங்களெபொங்கும்
கொங்கைகளெங்கும் குங்குமந்தங்கும். [ கங்குல்மங்கும்*

---

க. **விநாயகன் வணக்கம்.** மாது: திருமகள். காத்தான் வருணகுலாதித்தன் பெயர். சூது: சொற்கேட்டான் ஆடுங் காய். சந்தம்: சந்தனம், சந்தரநுதல்: திங்கள் போன்ற நெற்றி. சங்கரி: அம்பிகை. கந்தம்: மணம். தந்தி: யானை.

உ. **முருகன் வணக்கம்.** ஆய்ந்து: ஆராய்ந்து. சிங்காரம்: அலங்காரம்.

ங. **பாட்டுடைத் தலைவன் சிறப்பு.** முகில்: மேகம். அருணமலர்: தாமரை. சங்கு: வளையல். திங்கள்: மதி. கங்குல்: இருள். வருண குலாதித்தன் மகிழ்ந்து மனம் வைத்தால், மங்கையரின் செங்கைகளில் வளை தங்கும், மதிமுகம் மலரும்; மன இருள் மடியும், கொங்கைகளில் குங்குமச்சேறு தங்கும்.

## கலிவெண்பா

### பெண்ணின் பெருமை

நீர்கொண்ட மேக நிறங்கொண்ட மேனியான
பார்கொண்ட பாதப் பரந்தாமன் - சீர்கொண்ட

உம்பருக்கு மால்எழுப்பி ஓங்குநெடு மத்தாகச்
செம்பொற் கிரியைத் திரித்ததுவும் - அம்பரத்து

வீசுமதி தூணாக மேனிமெலி வித்ததுவும்
வாசுகியை நாணா வருத்தியதும் - ஓசை அலை

தன்னைக் கடைந்ததுவும் தண் அமுதத் தோடுதித்த
மின்னைத் தழுவியதும் எண்ணாமல் - பன்னித்

திறம்பேசும் கோவலர்பால் சென்றுபதி னாறா
யிரம்பேர் மணம்புணர்ந்தான் என்றும் - பெருங்கனக ௫

---

க. நீர் கொண்ட மேகம் : கடல்குடித்த முகில். பார் கொண்ட பாதம் : உலகை அளந்துகொண்ட திருவடி. பரந்தாமன் : திருமால்.

உ. உம்பர் : தேவர். மால் : மயக்கம். செம்பொற் கிரி : மேருமலை. அம்பரம் : ஆகாயம்.

ந. மதி : சந்திரன். வாசுகி : ஓர் பாம்பு.

ச. மின் : இலக்குமி. பன்னி : பத்தினி.

௫. திறம் : வலி. (திறம் என்பது எதுகை நோக்கித் திரிந்தது) கோவலர் : இடையர். கனகம் : தங்கம்.

வல்லார்க்கும கொங்கை மடவார முதலாய
எல்லார்க்கும மாலாயி ஞன்என்றும் - சல்லாபச ௬
சிந்தைதனை மற்ருேர்பால் செல்லா வசிகரிகக
வந்துலகில் உற்பவித்த மாமாது - அந்தரத்தில
ஓது இனிய மினபோல் ஒளியாமல் எபபொழுதும
மேதினியிற சஞ்சரிககும மின்கொழுந்து - பூதலத்தில்
பைந்தொடியார் கோலம் பகல்விளககுப போலாக
வந்தொரு நநதா மணிவிளககு - சந்தப
படிவம எடுத்த பசுந்தோகை ஓகைப
பிடிநடை அனனத்தின் பேடை - அடிதுவக்கித் ௧௦
தஙகும கொழுந்தென்று தள்ளாமல் ஓரிடமபோல்
எஙகும்தித் திக்கும் இளஙகரும்பு - பொங்குவெயில்
கண்டு முகமகருகாக் கட்டுண்ணுத் தாதுதிரா
வண்டு துவையா மதுமாலை - அணடர்பால்
சோராக கலைகுறையாச் சுறறு முயறகளங்கம்
சேரா மறையாச் செழுந்திஙகள - ஆராயும ௧௫

---

௬. வல் : சூதாடுகாய. மாலாயினன் : மயக்க மடைநதான.

௭. வசிகரிக்க : பிடித்துக கவாந்திழுக்க. மாமாது ; மடல் தலைவி. அந்தரம : விண.

௮. மேதினி : உலகம. மின கொழுந்து : மினனல் தளிர்.

௯. பைநதொடியார், பிறபெண்கள. நந்தா : குறை யாத. சநதம: இனிமை.

௧௦. படிவம; வடிவு. பசுந்தோகை; பச்சைமயில் ஓகை: உவகை. பிடி: பெண்யானை.

௧௨ தாது: மகரநதத்தூள. மது: தேன். அண்டர்: தேவர்.

மைத்தவழும தெனபால் மலையமலை யிற்பிறவாச்
சித்தசன ஏருச சிறுதென்றல் - வைத்த கச

உலைபுகாக காயா உருகா நிறுக்கும
துலைபுகா மாற்றுரையாச் சொர்ணம் - அலைகடல்சூழ கரு

வெமபூவின் முபபூ விளைநிலத்தின் வீறடங்க
ஐமபூ விளையும அமிர்தநிலம - கெம்பீரத்து

ஆர்க்கும எவர்ககும அருந்தா திருந்தாலும
பார்க்க மயக்கும் பசுந்தேறல - போர்க்குரிய

காமனுக்கு வசராங்கி காமனுக்கு நிட்சேபம
காமனுககு மோகக் கருவூலம - காமனுக்கு

மூதண்ட லோகம் முழுதுமசெங் கோல்நடத்தும
கோதண்ட தீட்சா குருபீடம - மாதவரும

நற்ற வருமநிதியம நாளதோறும நன்றென்று
கறறகவி இன்பக கலைக்ஞானம - வெற்றிமதன் உo

மீதிட்ட காமநூல் வித்தைக்கு அடஙகாமல்
வாதிட்ட பஞசவா ணககிளளை - ஆதித்தன் உக

---

கச. மை: மேகம. மலையமலை: பொதிகை. சித்தசன் : மனமதன.

கரு துலை: தராசு.

கசு. வெமபூ, விருமபத்தகக பூமி. வீறு: சிறப்பு.

கஎ. தேறல்: தேன.

கஅ. வசராங்கி; வைரககவசம: நிட்சேபம: புதை பொருள. கருவூலம: பொக்கிஷம.

ககூ. மூது: பழைய. அண்ட லோகம்: முட்டை வடிவமான உலகம.

உo. நிதியம : செல்வம. கலைக்ஞானம் : சாத்திர அறிவு.

உக. காமநூல்: மதன சாத்திரம. வாது: சண்டை. பஞசவர்ணம: ஐந்து நிறம். கிளளை: கிளி. ஆதித்தன்: சூரியன்.

பொங்குகதிர் காணாத பூங்குமுதமும் கங்குலையும்
திங்களையும் காணாச் செழுங்கமலம் - எங்குமில்லை ௨௨

ஆக நகைக்கும் அரம்பையரின் மேனகைக்கும்
கோக நகைக்கும் குலதெய்வம் - பாகுமொழிப்

பண்ணும் நடையும் பழகும்ஒரு சித்திரம்போல்
நண்ணும் மதன ரசகுளிகை - வண்ண

நெடியதரு விற்படரா நீளவல்லி தாவிக்
கொடிபடராக் கற்பகப்பூங் கொம்பு - வடிவுமிகு ௨௫

பெண்ணுருவம் ஆகப் பிரமன் கடைந்தெளித்த
மண்ணுலகம் காணக் வரும் அமிர்தம் - எண்ணம்

சிறப்பிக்க மாதவத்தோர் செய்தவங்கள் எல்லாம்
துறப்பிக்க வந்தபெரும் சூழ்ச்சி - நிறைந்து

பெருகி உவட்டெடுத்த பேரின்ப வெள்ளம்
பருகில் தெவிட்டாப் பசுந்தேன் - ஒருவருக்கும்

பூணக் கிடையாத பொன்ஆரம் தூரத்தே
காணப் பரிமளிக்கும் கஸ்தூரி - நீணிலத்தில் ௨௮

---

௨௨. கதிர்: கிரணம். பூங்குமுதம்: ஆம்பல் மலர். கங்குல்: இருட்டு. திங்கள்: சந்திரன். கமலம்: தாமரை.

௨௩. அரம்பையர்: தேவ மாதர். கோகநகை: திருமகள்.

௨௪. பண்: இசை. நடை: நடனம். நண்ணும்: பொருந்திய. மதனரச குளிகை: இன்பக் காம மாத்திரை.

௨௫. தரு: மரம். வடிவு: அழகு.

௨௬. துறப்பித்தல்: ஓட்டம் எடுக்கச்செய்தல். சூழ்ச்சி: தந்திரம்.

௨௭. உவட்டெடுத்தல்: தெகிட்டிவிடுதல். பருகுதல்: குடித்தல்.

௨௮. பூண: அணிந்துகொள்ள. பொன் ஆரம், தங்க மாலை. பரிமளித்தல்: மணத்தல்.

கொல்லாக கொடுங்கூற்றம கூவாமல் கொஞ்சுகுயில்
எல்லாக் கலைகளும இனியமான் - உல்லாசத் ௩௦

**இரு அடி**

தேமேவு அனிச்சச் செழுமபோது எனும்இனிய
பூமேல் நடக்கப பொருமலோ - மாமோகத்து

அந்தமத நூல்கொண்டு அமிர்தநிலை ஆராயும
மைந்தா அதிமதுர வாயபடடோ - முநதுகணைச்

செங்கைச சிலைவேள திருமுடியின மேல்வைத்தோ
மஙகையாதம கையால் வருடியோ - பஙகம்உற

வாட்டியவா னோரை வசிகரிக்கச் செம்பஞ்சு
இட்டியோ கோலம சிவந்ததென - நாட்டம

திகழ அகமசிவந்து செம்பவளக் கொம்பும்
பகருமஎழில் இநத்ராணி பநதும - புகழஇளைஞர் ௩௫

மெத்துமதி சோர்வதற்கு விண்மதிபோ தாதென்று
சித்தசனதான ஆராயந்து செயதமதி - பததும ௩௬

---

௩௦. கொடும கூற்றம: பொல்லாத எமன்.

**க முதல் ௩௦ கண்ணிகள் பொது வர்ணனை.**

௩௧. தேமேவு: தேன்பொருந்திய. போது: பூ.

௩௨. மதநூல்கொண்டு ஆராயும மைந்தர்: காமக்கலை வல்லார். அதிமதுரம: மிகுந்த இனிபபு. கணை: அம்பு.

௩௩. சிலைவேள்: வில் ஏந்திய காமன்.

௩௩. ௩௪, பஙகம் உறவாட்டிய வானோர்: தங்கள் உடம்பு கெடுமாறு வருத்தித தவமசெயவலல மேலோர். வசிகரிக்க: அவர்களைககூட வசியபபடுத்த. செமபஞ்சு இட்டுதல்: திருவடிக்குப பஞசிலை சாயந்இட்டுதல். நாட்டம: கண்.

௩௫. பவளகொம்பு: பவளக் குச்சி. இந்த்ராணி பந்து. அமரர் அரசன் தேவி ஆடும பந்து.

௩௬. மெத்துமதி: மிக்க புத்தி. விண்மதி: வானப் பிறை. சித்தசன்: மதனன். பதது: இரண்டு கால்களின் விரல்கள் பத்து.

பெரிது விஜயம பெறுமதன ராஜன்
சரிதமநிறை புத்தகமும தாஙகி - பரவியே ௩௭
ஆதிப பிரமன் அனத்தைத் திருத்திநடை
சாதிப்பிக் குமகமலத தாளினள - மேதினியில்

பரடு

நாளே மடல்விரியும நாளிகே ரத்தின் இளம
பாளே விரியாப பசுங்குருமபை - நாளும ௩௯

௩௭. மதனராஜன் சரிதம நிறை புத்தகம்: மன்மதன் பெருஙகதை நூல.

௩அ. ஆதிப பிரமன்: பழைய பிரமா. அனத்தைத் திருததி: அனனததின நடையையும திருத்தஞசெயது. சாதிபபிததல்: சாதிககுமபடி செயதல. தாள: அடி.

**௩க முதல் ௩அ முடிய அவள் திருவடிச் சிறப்புக் கூறப் பட்டது.** இபபடியே ஒரு நஙகையைக காலமுதல் தலே வரை அலஙகரிததுக கூறபபடுகிறது. அனிசச மலர் மேல நடகக ஆறறுமலோ, காமுகர் திருவாயபபட்டோ, மனமதன முடிமீது தாக்கியோ, வருடிய சேடியர கை பட்டோ, செமபஞசுக குழமபு இட்டியோ சிவந்துபோன தென்று சொலலுமாறு பாரபபோர கண்களேயெல்லாம கவாநது, பவளக குரசிகளில பநதைதத திரட்டிவைத்தது போனற விரலகளேககொண்டு, அப பத்து விரலகளும பத்துச சநதிரர்களேபபோல பிரகாசமபெறறு மனமதனின விரிந்த காதை முழுதையும எலலோரககும நினேப பூட்டுவதுபோனற அனனததின நடையை வெனற திருவடிகளே உடையாள எனபது ௩க முதல ௩அ முடிய உளள கணணிகளின கருத்து.

௩௯. மடல : பாளே இதழ். நாளிகேரம: தென்னே. விரியும பருவததேயுளள தெனனேப பசுங்குருமபை காற் குமிழுககு உவமை.

**௩௯ முதல் ௪௨ முடியப் பரட்டின் வர்ணனே.** 'பரடு' எனபது பாதததிற்கு மேல் பூட்டு எலுமபாக அமைந

அவங்கள புரியாது அருநதுறவோர் செய்யும
தவங்கள நிறுககும தராசு - நவங்கொள
இரண்டு நிகராகி எல்லோர்க்கும இன்பம
திரண்ட எனஅழகு சிநதி - மருண்டமதன
வேதசா ரங்குமுறும் மினனார் புரத்துடனே
பாதசா ரனுரூழ பரட்டினை - ஆதரவின்

**கணைக்கால்**

ஆட்சிமத ராஜவிருது அத்தனையும ஊதாமல்
காட்சியிலே போதிக்கும காளமபோல் - மாட்சிஇணை
மீதார விழிக்கயலின மேறபாயச சூதொட்டி
வாதாகி நிறகும் வரால்இணைபோல - ஊதுகுயில

---

திருக்கும இரண்டு குமிழபோன்றிருககும் உறுபபு. அதற்குக் காறகரண்டை என்று பெயர். கரண்டைக கால் என்றும சொலலுவதுண்டு.

௪0. இரண்டுபுறமும இரு கரண்டை இருபபதால தராசு ஒப்புக்கூறபபட்டது. அருமையான துறவிகளது தவத்தைதககூட நிறுத்துப பாாததுவிடும வலிமை கொண்ட தராசு அது. நயம: புதுமை.

௪௧. ௪௨. மயஙகிய மதனுடைய ஆரண ரசம் பிறிடுகின்ற மின் அனைய சிலமபணிந்த பாத ரசம பிலிறறும பரட்டினை உடையாள்.

௪௩ முதல் ௪௬ முடியக் கணைக்கால வர்ணனை. கணைக்கால என்பது முனகுறிதத பரடடுக்கும் முழந்தாளுக்கும் இடையே உளள ஓர் அவயவம.

௪௩. காளம: வெற்றிச் சினனம

௪௪. விழிக்கயல: கண்ணாகிய கயல்மீன். சூதொட்டி: சூது தொடுதது. வாதாகி: போருககுத் தயாராகி. வரால் இணை: இரண்டு வரால் மீன்கள.

காள மதன்முதுகு காட்டாமல மாட்சிபெறத்
தோள தனிற் கட்டுகின்ற தூணிபோல - வேளின ௪௫
பெருத்தகணைக் காலைந்தும் பின்னிடவே மைந்தா
கருத்தை வருத்தும் கணைக்காலாள் - ஒருத்தி

**முழந்தாள்**

அமையுமஇலங காபுரியில் அனறுசெனற தூதர்
தமையும மருட்டுமுழந் தாளாள - அமுதுபயில்

**துடை**

அங்கஅநு ராக அதிமோக சாகரத்தைச்
செங்கைஉற நீந்துகைக்காம் தெப்பமோ - இங்கிதமாய்
மட்டுபப டாஇளைஞர் வாஞ்சை மதயானை
கட்டுப் படுமஇரணடு கம்பமோ - தொட்டுமயல்
நாட்டுகல விககினிய நாடகசா லைக்கழகு
சூட்டு மணிமுகப்பின தூண்களோ-கோட்டுஇபத்தின் ௫௦

---

௪௫. தூணி. அமபறாத்தூணி. வேள்: மன்தன்.

௪௬. கணைக்கால ஐந்தும் பினனிட: அம்பின் நுனிகள ஐந்துமபின்னிக்கொள்ள. ஒருத்தி: ஒபபறற சீதை.

௪௭. தூதர்: அனுமார். மருட்டுதல்: மயக்குதல். அமுதுபயில்: அமுதத்தில் பழகுகினற.

௪௮. அஙகம: உறுபபு. அநுராகம: ஆசை. அதிமோகம்: பெருஙகாமம. சாகரம்: கடல். துடை தெபபத்திற்கு உவமை.

௪௯. மட்டுபபடா; கணககில் அடஙகாத. வாஞ்சை: பிரியம. கமபம: தூண். இளைஞர்களை மதயானையாக வும துடைகளை அவ் யானைகள கட்டும கம்பஙகளாகவும உருவகபபடுத்தபபட்டிருககின்றன. மயல்: மையல்.

௫௦. கல்வி: சேர்க்கை. கோடு: கொமபு. இபம்: யானை.

சுத்தத் துதிக்கையோ சொல்உவமை என்றுஉலகோர்
சித்தத்து உதிக்கை சிறப்பித்து - மெய்யத்திமிர ருக
வாரணவேள் ஒலக்க மால்வசந்த மண்டபம்சேர
தோரண வாழைத் துடையினள் - தாரணியில்

**அல்குல்**

ஆல்இக்கு வில்வேள் அமளியிலே இவ்உலகில்
பாலிக்கும் இந்தர பதமென்ன - சீலிக்கும்
புந்திக்கு மாலுதவும் போமாரன் போகஷமென
வந்திக்கும் பொன்ஆல வட்டமெனச் - சிந்தித்துச்
சூழுமணி தாங்கித் துலங்குகுறங் காமஇரண்டு
வாழைஇடைச் செந்தேனை வைத்ததென-வேழத்தை ருரு
காமித்த தென்றல் குறங்கினஉரக் காரிகையார்
சேமித்து அலங்கரித்த தேரெனனப் - பூமிக்குள் ருசு

---

ருக. திமிரம் : இருள்.

ருஉ வாரணம் : யானை. வேள் : காமன். ஒலக்கமால் வசந்த மண்டபம் : கொலுவீற்றிருக்கும் பெரிய இள வேனில் மாளிகை. தாரணி : உலகம்

ருந. ஆல் : நஞ்சு. இக்கு : கரும்பு. மன்மதனது கரும்பு வில் சிலரை விஷம்போல் நலிவதால் ஆல் இக்கு வில் வேள் என்று கூறப்பட்டது. அமளி : படுக்கை. பாலித்தல் : கொடுத்தல். இந்த்ரபதம் : சுவர்க்க வாழ்வு. சீலித்தல் : ஒழுக்கத்தோடு வாழ்தல்.

ருச. புந்தி : புத்தி. மால் : மயக்கம். வந்தித்தல் : வணங்குதல்.

ருரு. மணி : ரத்னம் இழைத்த ஆபரணம். குறங்கு துடை. வேழம் : கரும்பு.

ருசு. குறங்கு : காற்றுடி. தென்றலைத் தேரோடு கூட்டுக. தென்றல் காமனின் தேர்.

வண்மைமதன நூல்ஒழிய மறறுள நூல் பொயஎனவே
உண்மை விளக்கும உருவமாய - திண்மைஉடை ருஎ

மாரன அரசொழிய மற்ருேர் அரசிலைஎன று
ஆரமயல் பூட்டும் அரசிலையாய் - ஈரம

தயஙகி அமிர்தம் ததும்பிஇதழ் உற்று
வயஙகுபொறிப பைந்நாகம ஆகி - நயஙகுலவி

ஓசைமணி மேகலையின் உட்கலையில எஞ்ஞான்றும்
ஆசை பரிமளிக்கும அல்குலாள் - ஈசா சுo

**இடை**

துடியாய்ப் பிடியாய்ச சுருதியாய் வல்லிக்
கொடியாய் இளவல்லிக கொம்பாய் - வடிவுஅடங்கப் சுக

---

ருஎ. திண்மை : வலிமை.

ருஅ. மாரன் : காமன. முதல் அரசிலை என்பதை அரசு இல்லை எனக் கொள்க. இரண்டாவது அரசிலை அரசமரத்தின இலை. அது உபமானததில் வந்தது. ஆர மயல் : நிறைந்த மையல்.

ருசு. பொறி : புள்ளி. பை : படம. நாகம : பாம்பு. குலவி : பொருந்தி.

சுo. ஓசை மணி : சலசலககும முத்துக்கள. ஞான்று : பொழுது. பரிமளித்தல் : மணத்தல். ஈசர் : சிவபெருமான. அவர் கையில் வைத்திருக்கும துடி அடுத்த கண்ணியில் வருகினறது.

சுக. துடி : உடுக்கை. இது பறை வகைகளுள ஒன்று ; நடுபபகுதி மிகவும சிறுத்திருக்கும ; அது இடைக்கு ஒப்பு. பிடியாய் : கைப்பிடிககுள் அடஙகுவதாய். சுருதியாய் : ஒலி போனற மென்மையுடையதாய். வடிவு அடஙக : அழகெலாம ஒருசேர.

பண்ணிச் சமைத்தஅயனா பாதாதி கேசமெல்லாம்
கண்ணெச்சில் என்று கருதியே - வண்ணமலர்த் ௬உ

தேமருவும் அல்குல்எனும் தென்றல் செழுந்தேரில்
மாமதனை நின்ற வடிவமென - நாமருவு

மாதுவிளை யாடுமுது வாய்ப்புலவர் சொற்பயன்போல்
ஈதுதெரி யுந்தெரியா தென்னலாய் - மூதறிவிற்

பண்டைமொழி யிற்குறித்த பாவலரே போல்எவரும்
உண்டில்லை எனனும உரைக்கிசைந்து-மண்டலத்தில் ௬௫

---

௬உ. பண்ணி - சமைத்த : மீமிசை, அதாவது, ஒருபொருள் இருசொல் ; செய்த என்பது பொருள். அயன் : பிரமன். பாதாதி கேசம : உள்ளங்கால் முதல உச்சி முடிய. கண் எச்சில் என்று கருதியே : கண்பட்ட எச்சில் என நினைத்தே. மற்றைய அங்கஙகள் அனைத்தும கண் எச்சில் ஆகிவிட்டதால் கண் எச்சில் படாமல் - கண்ணுக்குத் தோற்றுததாக இடையை வகுத்தான படைப்புக் கடவுள் என்பது கருதது. வண்ணம : அழகு.

௬௩. தே மருவு : தேன ததும்பும. நா மருவு : நாவில் பொருந்திய.

௬௪. மாது : கலைமகள். முதுவாயப் புலவர் : தேறிய வாயை உடைய பண்டிதர். ஈது தெரியும தெரியாது என்னலாய் : இடை தெரியும என்று சிலர் சொல்ல, இல்லை; அது தெரியவே இல்லை எனச் சிலர் செப்புகின்றார்.

௬௫. உண்டில்லை எனனும உரைக்கு இசைந்து : சிலா இடை உண்டு என்று உரைக்கின்றார் ; வேறு சிலா இடையே இல்லை என இயமபுகின்றார். இரண்டு உரைககும் இசைவாக இருககின்றது இடை. "பல்லியல் நெறியிற் பாாக்கும பரமபொருள் எனனயார்ககும, இல்லை உண்டு என்ன நின்ற இடையினுககு இடுககண செயதார்" என்ப பேசுகின்றார் கவிச் சககரவர்த்தி.

மாததானை காத்தான வருணகுலா தித்தனைச்சென்று
ஏத்தார்போல் தேய்ந்த இடையினாள் - நித்து௪ ௯௬

**உந்தி**

செழித்துவாழ இல்லறத்தைத் தீதென்பார் நெஞ்சைச்
சுழித்துவாங்கு உந்திச் சுழியாள - விழித்தெதிரே

**வயிற்று மயிர் ஒழுங்கு**

உற்றமால் பூட்டும உதரவட பத்திரத்தில்
கொற்றமால் பள்ளிகொண்ட கோலமோ - வெற்றிமதன்
செங்கைச் சிலைநாணோ செங்கோலோ கொங்கைஎனும்
துங்கக் களிற்றின் துதிக்கையோ - குங்குமம்சேர் ௯௯

---

௯௬. மா தானை : பெரும் சேனை. ஏத்தார் போல் : வணங்காதாரைப் போல. வருணகுலாதித்தனை வாழ்த்தாதார் தேய்வதுபோல இடை தேய்ந்தது என்பது சிறந்த கருத்து நயம் கொண்டது.

௯௭. செழிப்புடைய இல்வாழ்வை விரும்பாதார் உள்ளத்தைச் சுழற்றி இழுக்கும் உந்திச் சுழியுடையாள். "அறன் எனப் பட்டதே இல் வாழ்க்கை" அல்லவா. உந்திச் சுழி : கொப்பூழ்

௯௮. மால் பூட்டும் : மயக்கம் கொடுக்கும். உதர வட பத்திரம் : வயிறு ஆகிய ஆல் இலை. கொற்றமால் : வெற்றித்திருமால். கோலம் : அழகு. வயிறு ஆலிலை யாகவும் அதன் நடுவே உள்ள மயிர் ஒழுங்கு ஆலிலை மதியில் நெடுமால் பள்ளி கொண்டது போலவும் தோற்றம் அளிக்கின்றன.

௯௯. சிலை நாண் : வில்லில் கட்டும் கயிறு. செங்கோல் : நேரான கம்பு. கொங்கை யானையின் மஸ்தகத்துக்கு ஒப்புமை கூறப்பட்டது. மயிரொழுங்கு அவ் யானையின் துதிக்கை. களிறு : யானை.

பொறபுமுலை யாமஇரட்டைப புண்டரிகப் போதருமபி
நறபுதுமை காட்டும்ஒரு நாளமோ - அறபுதவேள எ௦

ஆர்ககும திருநாளுககு அல்குலதேர் பினஓட்டம
பார்க்கப பிணிதத பணிவடமோ - நிர்ககுமிழி

ஏந்துமஇரு கொங்கை இளநீர் கலநதணிந்த
சாநது புழுகுஒழுகும தாரையோ - மாநதர்மருள

உர்சாய மாம்இடைக்கும ஓயகுபய மாமுலைககும
அர்சாய நிறுத்தியநா ராசமோ - கரசாரம

வனனகு சிறந்தமுலை மால்வரையின மாதவத்தோா
தனநெஞசை ஏறறுமொரு சாரமோ - கனணிப்

புளகஅபி ராமப பொருவுருகெம பீரக
களபமுலைச் செவவிளநீரக காமபோ - வளமையினல் எரு

---

எ௦. பொறபு: அழகு. புணடரிகம: தாமரை. போது: மலர். நாளம: கொடி. இரணடு மலர் அருமபிய ஒரு கொடி போனறிருக்கிறது உரோம வரிசை.

எக. பிணித்த: கட்டிய. வடம: கயிறு.

எஉ. சாந்து: சந்தனம். புழுகு: புனுகு. தாரை: ஒழுங்கு.

எ௩. உசசாயம: சிறபபு. உபயமாமுலை: இரு பெரும் தனஙகள. நாராசம: இருமபினலை செயயப்பட்ட அமபு. இடைககும் தனஙகட்கும இடையே பொருத்தி நிறுத்தபபட்ட அசசுப போன்றிருககின்றது, மயிர் வரிசை. கரசு: ரவிககை. ஆரம: மாலை.

எச. மால் வரை: பெரிய மலை. சாரம்: ஏணி

எரு. புளகம: மயிரச சிலிரபபு. அபிராமம: மனத்திறகு இனிமைதரல். பொருவரு: ஒபபற்ற. கெமபீரம: பெருமிதமான தோறறம. களபம: வாசனைத திரவியம. வளமை: வளப்பம.

எண் இரண்டு கொங்கைக்கு இடைவெளியைநோக்குகின்ற
கண் இரண்டின் பத்திக் கதிர்ஒழுங்கோ-எண்ணிஎண்ணிப்,

பார்க்கும் பொழுதில பலகோடி சொல்உவமைக்கு
ஏற்கும் சிறுரோம ரேகையாள - நீர்க்கயத்து

• **கொங்கை**

சீதவன சத்தருமபைசர செப்பலாம அவ்அரும்பு
ஆதவனைக் கண்டால் அலருமே - சூதாடு

வட்டென்று உவமை மதிக்கலாம வட்டதனை
வெட்டென்று சொல்ல விதிஉண்டே - நெட்டுடலச்

சக்கரவா கத்தைச் சரிஉரைக்க லாமஅதுவும
மிக்க சிறகுடைத்தாய விட்டதே - ஒக்கும்எனப் அo

பாரப பருவமலப பசிளநீர என்னலாம
ஆரப புளகம அரும்பாதே - வீரமதன

வண்ணமுடி என்று மதிக்கலாம அம்மகுடம
தண்ணெனவும வெச்செனவும தாராதே - பண்ணரிய

---

எசு. பத்தி : வரிசை. கதிர : ஒளி.

எஎ. ரேகை : கோடு. கயம : தடாகம.

எஅ. சீதம : குளிர்ச்சி. வனசத்து அரும்பு : தாமரை மொட்டு. ஆதவன் : சூரியன. அலரும் : மலரும்.

எகூ. வட்டு : காய். நெட்டு உடல : நீளமான உடமபை உடைய.

அo. சக்கரவாகம : ஒரு பறவை. அப்பறவையைக் கொங்கைக்கு உபமானமாகக் கூறுகிறார இம்மடல ஆசிரியர். அப்பறவையை நாம அறியோம.

அக. பாரம : பெரிய. ஆரப புளகம : நிறைந்த மயிரக் கூச்சு.

அஉ. தண் : குளிர்ச்சி. வெச்சு : வெப்பம. "வாவி உறை நீரும வடநிழலும், பாவகமும், ஏ அனைய கண்ணா இள முலையும் — ஓவியமே! மென சீதகாலத்து வெம்மை தரும வெம்மைதனில், இனபாரும சீதளமாமே." என்ற வெண்பா இங்கு நினைக்கத் தக்கது.

சித்ரமணிச் செப்பென்று செப்பலாம் அச்செப்புப்
புத்தமிர்த போகம் பொசியாதே - சுந்தரதிச் ௮௩

சுந்தரமேசா புற்புதத்தைச் சொன்னால் பனிநீரும்
சந்தனமும் குங்குமமும் தாங்காதே - விந்தைசெறி ௮௪

அந்நறுங் கோங்கின் அரும்பெல்லாம் அவ்வரும்புக்கு
இந்த முகக்கருமை எய்தாதே - சந்தமிகும் ௮௫

பூரணகும்பங்கள் என்பபோற்றலாம் அக்கும்பம்
தாரணியும் ஒண்சுணங்கும் தாராதே - சீரணியும் ௮௬

மாகனக வெற்பெல்லாம் மற்றுமந்த வெற்பு அரனார்
கோகனகக் கையால் குனிந்ததே - வாகுசெறி ௮௭

பந்திணைகள் என்று பகரலாம் அப்பந்தும்
இந்துநுதலார்க்கு இடைந்தெழுமே - கந்தமிகும் ௮௮

---

௮௩. செப்பு : கிண்ணம். புத்தமிர்த போகம் : புதிய அமிழ்த இன்பம். பொசியாது : கசியாது.

௮௪. புற்புதம் : நீர்க்குமிழி.

௮௫. நறும் : நல்ல. கோங்கு : ஒரு பூச்செடி, அல்லது பூமரம். கோங்கரும்பு கொங்கைக்கு உபமானமாகப் பல இலக்கியங்களிலும் பயின்று வந்திருக்கிறது. அது யாதெனத் தெரியவில்லை.

௮௬. தார் : மாலை. அணி : நகை. ஒண் சுணங்கு அழகுத் தேமல்.

௮௭. கனக வெற்பு : பொன் மலை. அரனார் : சிவபெருமானார். கோகனகம் : தாமரை. குனிந்தது : வில்லாக வளைந்தது. வாகு : எழில்.

௮௮. பந்திணைகள் : இரண்டு பந்துகள். இந்து நுதலார் : சந்திரன் போன்ற நெற்றியை உடையார். இடைந்து எழும் : தளர்ந்து எழும்பும். கந்தம் : மணம்.

பூங்கொத்து இணையாப புகலலாம பூங்கொததும்
தேங்குதெனறல் விசச சிதறுமே - மாஙகனியின ௮௯

பகருவமாம எனறு பகரலாம அககனியும
மிககிளி கோதியிடில் மீறுதே - தககபொரு ௬௦

வாருமத யானை இரு மத்தகமஎன ருதலாம
பாகர்கொடுந் தாரகுப பயநததே - ஆகையினால்

மாவோ முதலிநத மணடலததில் நேரினறித
தாவோ தனககுச சரியாகி - ஞாலமெலாம

மொணடெடுத்த மோன முனிககுறுமபெ லாமடக்கத்
தண்டெடுத்து வந்த தநுமாரன - கொண்டலெனும

மட்டவிழும பூஙகோதை மாதுரதிக குந்தாக்கும
இட்டவினைக கூடாரம எனனலாம - பட்டத்து

இடஙகொண்டு பூரிதது இறுமாந்து முத்து
வடங்கொண்டு மேனமேல் வளர்ந்து - தடஙகொண்ட ௬௫

---

௮௯. தேஙகு தெனறல் : நிறைந்த தென்றற் காற்று. சிதறும : சின்னபின்னமாகும.

௬௦. கோதியிடில் : கடித்து விட்டால். மீறுது : வளராது. பொரு : போர் செயகினற.

௬௧. பாகா : செலுததுவோர். கொடுந்தார் : பொல்லாத அஙகுசம்.

௬௨. நேர : சமம. ஞானம எலாம : அறிவு முழுமையும.

௬௩. மொண்டெடுத்த : முகாநது கொணட. தநுமாரன : வில் வலல காமன : கொண்டல் : மேகம.

௬௪. மட்டு : தேன. கோதை : கூநதல். வினைக் கூடாரம : தொழிற்சாலைக் கூடம. வட்டத்து : வட்ட வடிவமாக.

௬௫. இடங் கொண்டு : பககத்து இடஙகளை ஆக்ரமித்து. பூரித்து : பருதது. தடம : விசாலம.

வட்ட இரு மந்தரத்தை மாபிற பதித்திறுகக்
கட்டுமணி ஆணிபோற கண்கறுத்துக் - கிட்டரிய ௯௬

பாளித லேப படீரம உலாவிய
லாளித மோகன ராஜசம் - மேளம்

னோகர காமவி னோதவி காரவ
சிகர கோமள சீதளம - ஆகி

அருமபி விரும்பி அசைந்து தசைநது
நிரமபி நெருஙகி நெகிழ்ந்து - பரந்து

சுணஙகு நிறைந்து சுகந்த கதமப
மணஙகுடி கொணடு வயஙகி - இணங்கி ௧௦௦

அருந்தவர் சிந்தை அடங்கி மடஙகி
வருநத நெருஙகி வளாந்து - திருநதிஒரு

திதுஙகொள ளாத செழுநதா மரைமுகையின
மோதும சிறுதிவலை மொயததனபோல் - ஓதுமரா ௧௦௨

---

௯௬. இரு மந்தரத்தை : இரணடு மந்தர மலைகளை. இறுகக கட்டும. இறுககிப பூட்டுகினற.

௯௭. பாளிதம. பசசைக கற்பூரம. லேபம : பூசசு; லேபனததின இடைக குறை. படீரம. சந்தனம. லாளிதம : அழகு. ராஜ சமமேளம : ராஜஙக கூட்டம. கடைசி எழுததாகிய 'ம'வை அடுதத கண்ணிககுக் கொண்டு போக வேண்டும.

௯௮. மனோகர காம விநோத விகார வசிகர என்று பிரிததுப பொருள கொளள வேணடும.

௯௯. அருமபி : அமபி. தசைந்து : தசைப பொலிவு பெறறு. நெகிழநது : மிருதுத தனமையாகி. பரநது : இடங கொண்டு.

௧௦௦. சுணஙகு : தேமல. வயஙகி : விளஙகி.

௧௦௨. முகை : மொட்டு. சிறு திவலை : சிறிய நீர்த் துளி.

வாழுக் கடல்கடைந்த மாயோன் மணிமகுடம்
சூழத் தெறித்த சுவைத்துளிபோல் - ஏழுலகும் ௧௦௩
மெச்சு கலைமதியின் வெண்ணிலா வீசுமுத்தின்
கச்சுப் புனைந்த கனதனத்தாள் - இச்சையினால்

**கை விரல்**

ஏத்துகின்ற காமுகர்மேல் இன்பவேள் முத்திரையைச்
சாத்துகின்ற முத்திரைக்கோல் தானென்ன-சூத்திரங்
ஆயில் ஒருவர் அறியா அமிர்தநிலைக [ கண்டு
கோயில்திறக் குந்திறவு கோலென்னத் - தூயகலை
வாசிக்கும் பஞ்ச வனக்கிள்ளை யின்சிவந்த
நாசிக்கு நேராய நகந்துலங்கத் - தேசுற்ற
பத்ர கரவீர பத்திரமோ கோமளஞ்சேர்
சித்ரப் பருவச் சினைக்கெளிறோ - மெத்தென்று
துய்ய பவளத் துகளறுகொம் போலென்ன
வெய்யமயல் பூட்டும் விரலினாள் - செய்யசெழுந் ௧௦௯

---

௧௦௩. தெறித்த : சிதறிய. சுவைத் துளி : இனிக்கும் சொட்டு.

௧௦௪. நிலா வீசு முத்தின் கச்சு : நிலவு கொழிக்கும் முத்துப் பதித்த ரவிக்கை.

௧௦௫. முத்திரை : அடையாளம்.

௧௦௬. ஆயில் : ஆராய்ந்தால். திறவுகோல் : சாவி. தூய கலை : பரிசுத்தமான நூல்.

௧௦௭. பஞ்சம் : ஐந்து. வனக்கிள்ளை : சோலைக்கிளி. நாசி : மூக்கு. துலங்க : விளங்க. தேசு : ஒளி.

௧௦௮. கரவீர பத்திரம் : அலரிச்செடியின் இலை. சித்ரம் : ஓவியம். சினைக் கெளிறு : கருவுற்ற கெளிறு என்ற மீன் வகை.

௧௦௯. துகள் : குற்றம். வெய்ய மயல் : கொடும் மயக்கம். பூட்டுதல் : சேர்த்தல்.

### உள்ளங்கை

தாமரையின போதைதர் சலபபடுத்திக் காந்தளெனும
மாமலரைத் தூர வனத்தகறறிக் - காமுகர்மேல் ககo
வெஙகடுஙகோ பத்துடனே வீசிப புடைத்தாலும்
செஙகழுநீர்ப பந்தொத்துச சீதளமாய் - இஙகிதத்து
மோகமபூ ரிக்க முடிதுவககித் தாளளவும்
ஆகமபூ ரிக்கும் அகங்கையாள் - ஓகை இசை

### முன்னங்கை

விண்டிருக்கும யாழ்களெல்லாம வெட்கத் திருஉருவம்
கொண்டிருக்கும் யாழஇனிய கோடொத்து -வண்டணிந்து
சுறறுநவ ரத்னம துலங்குகட கஙகளினல்
மொயத்தழகு மாறுத முன்கையாள - சித்ரமுலை

### தோள்

பூரணகும பஙகளின்மேல் போட்டபெரு மாலைஎன்ன
ஆரணிவில் வேளபஞசு அணைஎனனச் - சீரணிந்து ககரு

ககo. சலப்படுத்தி : நீருக்குள் ஓட்டி. வனத்தகற்றி : காட்டுக்கு விரட்டி.

ககக. புடைத்தல் : அடித்தல். செங்கழுநீர் : சேதாம் பல். சீதளம் : குளிர்சசி.

ககஉ. ஆகம் : உடமபு. அகங்கை : உள்ளங்கை. ஓகை : மகிழச்சி.

ககந. விண்டிருத்தல் : விரிந்திருத்தல். யாழ : வீணை வகை. கோடு : வளைவு. வண்டு : வளையல்.

ககச. ரத்னம துலங்கு கடகம் : வைரம் இழைத்த காபபு.

ககரு. ககசு. பூரண குமபம் : முழுக்குடம். ஆர் அணி வில் வேள பஞசு அணை : நிறைந்த அழகுடைய வில் மாரனின் பஞசுபொதிந்த பகக அணை. அஙகுரித்து: முளைத்து. வேய : மூஙகில். தனமாகிய குடத்தின் மீது

கொங்கைமலை மேலஅங குரித்தெழுந்து ஒழுவளைந்த
துஙகமணி வேய்போலும தோளினள - திங்கள கககூ

**கழுத்து**

சுமுக மதராஜன் சுருதிஇரு நாவாம
குமுகுமெனும புளளோசை கொஞ்சத - தமரிக்கும்

வன்னிகரும பாளை மடலவிழ நாளசெல்லும
கன்னிக கமுகனைய கந்தரததாள - துன்இரவி

**முகம்**

வந்தாள் விகசிதமாய வண்டின பதந்துவையாச்
செந்தாமரைபோல் திருமுகததாள - நந்தாத

**உதடு**

மாபவள மோவிலமோ மாதளையோ வேலவிழியின
கோபவள மோஇநத்ர கோபமோ - சோபைதரும கஉ௦

---

கூடிய மாலையைபபோலவும மனமதன அணையைப் போலவும கொஙகை மலை மேல் முளைதது எழுநது ஒழு வளைநதிருக்கினற மூஙகில போலும தோளை உடையாள.

ககஎ. சுமுகம : நல்ல முகம. மதராஜன சுருதி : காமக் கலை இசை. இரு : பெரிய. குமுகுமு : ஒலிககுறிபபு. புள ஓசை : பறவைக குரல். தமரித்தல் : ஒலி செயதல.

ககஅ. வனனித்தல : வாணத்தை உண்டாககல். கனனிக கமுகு : இளம பாககு மரம. கந்தரம : கழுத்து. துன இரவி : நெருஙகிய சூரியன.

ககக. வநதாள விகசிதமாய : வந்து ஆளவதால் மலாகினற. விகசிதம : மலாதல். சூரியனால் மலாததப படும வண்டின கால்களால உழபபபபடும தாமரை போலல்லாத செந்தாமரை மலாத திருமுகம உடையாள.

கஉ௦. வேல விழியின கோப வளமோ : வேலனைய கணணின சினப்பெருககமோ. சின மிகுதி கணணைச சிவபபிககும; அசசிவபபு உதட்டின் நிறததுக்கு உப மானமாயிற்று. இந்திரகோபம : பட்டுப பூசசி. இது மழைக காலததில தோனறும; நல்ல செந்நிறமாகவும் பட்டுப்போல் மிருதுவாகவும இருக்கும.

தூதளையோ கிஞ்சுகமோ தொண்டையோ வண்டினங்கள்
தாதளையும் செங்குமுதத் தண்மலரோ - ஈதென்று ௧௨௧
எவரும் உபமானம் எடுத்துரைக்க நனமா
தவரும் மயங்கித் தயங்கக் - குவிபொன்
பொழிந்தருளும் தென்னாகைப் பூபதியைப் போற்றும்
செழுந்தமிழ் போற்செம்மை சேர்ந்து - தொழுந்திருமால்
இன்னம் ஒருகால் இருகை வருந்தாமல்
வன்ன மதியம் மழுங்காமல் - இன்அமிழ்தம்
ஆன உததி அலையாமல் வானவரும்
தானவரும் வெம்போர் செருவாமல் - நாணிலமேல் ௧௨௫
வாசுகியும் மந்தரமும் மாயாமல் மாறாமல்
ஆசை அமுது ஊறும் அதரத்தாள் - வீசுகதிர் ௧௨௬

---

௧௨௧. தூதளை : தூதுளங் கனி. கிஞ்சுகம் : முள் முருங்கம்பூ. இது சிவப்பு நிறமுடையது. "கிஞ்சுகவாய் அஞ்சுகமே" என்பது திருவாசகம். தொண்டை : கொவ்வைப் பழம். இனம் : கூட்டம். தாது : மகரந்தத் தூள்.

௧௨௨. குவிபொன் : பொற்குவியல்.

௧௨௩. பூபதி : வருணகுலாதித்தன். செழுந் தமிழ் போன்ற செம்மை நிறம் படைத்திருக்கின்றது இதழ்.

௧௨௩, ௧௨௪, ௧௨௫, ௧௨௬. பாற்கடல் கடையத் திருமால் இன்னும் ஒருமுறை கைகள் வருந்தாமல், கடல் கடைந்தபோது தூணைப் பொருத்தப்பட்ட சந்திரன் மழுங்காமல், அமுதம் தந்த கடல் திரும்பவும் கலங்காமல், அமரர்க்கும் அசுரர்க்கும் மற்றுமொரு போர் நேராமல், கடல் கடையக் கயிறாகப் பொருத்தப்பட்ட வாசுகி என்னும் பாம்பு மாண்டு மறியாமல், மத்தாகப் போட்ட மந்தரமலை நிலை குலையாமல், இயல்பாகவே ஆசை தரும் அமிழ்தம் ஊறுகின்ற இதழ்களை உடையாள் என்பது கருத்து. வன்னம் : அழகு. உததி : கடல். அதரம் : உதடு. வீசு கதிர் : ஒளிவிடுகின்ற.

**நகை**

முத்தாகித் தோகை முருந்தாகி முல்லைமுகைக்
கொத்தாகித் தந்தக் குருத்தருமபி - வித்தாரம் கஉஎ
வாயத்தபத்ம ராக மணிவைத் தரமபிரிததுத்
தேயததொடபம இட்டுவைத்த சோவைஎனக -கோத்துப
பொருநிருப வேளசிலையில பூங்காவி என்ன
இருநிரையும பூஙகாவி ஏறி - உருகிமனம
பூண நகைககும புகழுகமகொல்லி யம்பாவை
நாண நகைககும நகையினுள - காணஎதிர் கநூ0

**சொல்**

தீட்டிவைத்த சித்திரத்தைச சிங்கார மோகனக்கூத்து
ஆட்டுகிறகும செஞ்சொல அமிர்ததத்தாள -தோட்டிலயன்

---

கஉஎ. தோகை முருந்து : மயில இறகின அடிப பக்கம். இது தூய்ய வெண்மை நிறமாக இருக்கும. இது பலலுககு ஒபபு. "முருந்து உரழ் முரலார" என்பது நைடதம.

கஉஅ. பதமராக மணி : சிவபபு ரதனம. சிகபபை வரிசையாகக கோதத மாதிரி இருநதது பல்வரிசை. வெற்றிலையை நனருகப் போட்டிருததலகூடியபோலும!

கஉகூ. பொரு நிருபவேள : மனமதன. சிலை : வில். பூஙகாவி : காவி மலராகிய பாணம. இருநிரை : இரண்டு வரிசை. பூஙகாவி : அழகிய செந்நிறம.

கநூ0. புகழுக கொலலி அமபாவை : கண்டவா புகழைக்கொல்லும அழகிய பதுமை. நாண : வெட்க. நகை : சிரிபபு. நகை : பல்.

கநூக. எழுதி வைதத சித்திரததைக் கூடக கிடுகிடு வென்று மோகனக கூததாடச செயயும அமிழதம போனற சொற பயிறசி யுடையாள. தோட்டில் அயன : மலரினமேல் இருநத பிரமன்.

### கபோலம்

மண்ணுடர் விண்ணுடர் வந்தழகு பார்க்கவைத்த
கண்ணாடி போலும் கபோலத்தாள் - வண்ணஎழில் ௧௩௨

### மூக்கு

கொள்ளும் குமிழும் குமிழ்போல் நிறம்படைத்தால்
எள்ளும் சரியாம் இதற்கென்னத் - தெள்ளிச
சுரமஞ் சரிவிடுத்த சுண்ணம் பழித்த
அருமந்த சீவகனும் அஞ்சப் - பெருமணத்தின்
காமோது வண்டின் கணத்துக் களந்தறியா
ஆமோத வல்லபமுண் டாக்கிவைத்துப் - பூமேவு ௧௩௫
விற்காமன் தேரோடும் வீதிஎனச் சந்ததமும்
நற்கால் வழங்குகின்ற நாசியாள் - பொற்கோதை ௧௩௬

---

௧௩௨. கன்னம், வான் நாடரும் இம்மாநிலத்தாரும் அழகு பார்ப்பதற்குரிய கண்ணாடி போல அமைந்திருக்கிறது. கபோலம் : அலகு.

௧௩௩. குமிழ் : மூக்குக்கு இணையான ஒரு பூ. அது நல்ல நிறம் உடையது என்று தெரிகிறது. குமிழ் போல் நிறம் படைத்தால் என்பது அதனைக் காட்டுகிறது. " குரு வளர் பூங் குமிழ் " என்றார் திருக்கோவையார் ஆசிரியர். எள் : எட் பூ. எட்பூ ஏசிய நாசியாய் " என்பது மனோன்மணீயம்.

௧௩௪. சுரமஞ்சரி என்பவள் சீவகன் மணந்த பல பெண்களுள் ஒருத்தி. சுண்ணம் : வாசனைப் பொடி. அருமந்த : அரும் - மருந்து - அன்ன. பெருமணம் : சிறந்த நாற்றம்.

௧௩௫. கா : சோலை. கணம் : கூட்டம். அளந்தறியா : அளவிடமுடியாத. ஓது : சொல்ல. வல்லபம் : வலிமை.

௧௩௬. விற்காமன் தேர் : தென்றல். நற்கால் : நல்ல காற்று. நாசி : மூக்கு.

**செவி**

தேன்போது அணியும் செழுங்காவிக் கண்களெனும்
மானபோய வரவிட்ட வாயில்போல - தாமபோதத் கஙஎ

தாவபபொன் ஓலை தரித்தால் விழிககூற்றம்
வாவப பிடிக்கும் வலையம்போல் - பூவுலகெண்

சுத்தமுழு மாணிககத் தோடணிந்தால் நீலவிழி
அத்திஇரு பாலுதிக்கும ஆதவன்போல் - பத்திதரும்

பைந்தரளத் தோடணிநதால் பார்வைச் சகோரங்கள்
வந்தமுதம உணணும மதியமபோல - முந்தவே கசO

சால அழகு ததுமபி வழிந்தொழுகும
கோல மகரக் குழைச்செவியாள் - ஆலவடி கசக

---

கஙஎ. தேன போது : தேன் சொட்டும பூ. காவி : நீலோற்பலம். வாயில் : வழி. போத : நன்ருக.

கஙஅ. பொன் ஓலை : தங்கத் தோடு. விழிக்கூற்றம : கண்ணுகிய எமன. வாவ : தாண்ட. வலையம் : வளையம். பூஉலகுஎண் : பூமி மதிககின்ற.

கஙகூ. மாணிககத் தோடு :சிகபபுக் கல் இழைத்த தோடு. அத்தி : கடல். நீல விழியாகிய கடலுக்கு இரு புறமும புறப்படும சூரியன்போல இருககும சிவபபுத் தோடு அணிந்தால். பத்தி : வரிசை.

கசO. பைந் தரளத் தோடு : பசுமையான முத்துப் பதித்த காதணி. சகோரங்கள : நிலவு உண்ணும் ஒரு வகைப பறவை.

கசக. மகரக் குழைச செவி : மீன் வடிவமாகச் செயயபபட்ட காதணியைத் தாங்கிய காது. ஆலம் : நஞசு. வடி : கூர்மை.

**கண்**

வேல்போல் நிறம்படைத்து வீரவாள் போல்இரண்டு
சேல்போல் கயல்போல் திசைபரந்து - மால்போலச் கசஉ

சஞ்சரிகம் போலத் தயங்கிக் கடல்போல
நஞ்சும் அமுதுமயந் தருளிக் - கஞ்சமனைச்

செங்குவளை என்னச் சிறந்த கருவிளையின்
பொங்கு மலரெனவே பொறபெயதிக் - கங்குல்இபக்

கோலா கலவேள கொலைபபஞ்ச பாணமென
ஏலா விரகாக கினிஎழுபபி - மேலான கசரு

தேமா வடுவகிாபோல செவவிக் குறிபொங்கி
மாமாரன என்ன மததசேதாடி - பூமாதின்

ஆதி அரிபோல் அயனபோல் அரனபோலச
சோதி கறுததுவெளுத் துச்சிவந்து - பாதகமும்

மாயமும பொயயாமையும வஞசகமும தஞசமிகு
நேயமுட சூதும நினைவுருககு - பாயமும

அத்திரமும் வீறும அதிக்கிரம முஙகனவும
குததிரமும் போதக குடிகொண்டு - நித்தம இகல் கசகூ

---

கசஉ. சேல், கயல் : மீன வகைகள். மால், கரு விழிக்கு உவமை.

கசங. சஞ்சரிகம : வண்டு. கஞசம : தாமரை.

கசச. குவளை : நீலோறபலம. கருவிளை மலா : காககணம பூ என்ற ஒருவகைப பூ. கஙகுல இபம : இரவாகிய யானை.

கசரு. கொலைப பஞச பாணம : கொலை வல்ல ஐநது அமபு.

கசசு. மா வடு வகிர், கண்ணுககு உபமானம. "மா வடு வகிரனன கண்ணி பஙகா" எனறுா மணிவாசக னா. மாரனைப போனற மதமதபபு. பூமாது : இலககுமி.

கசஎ. திருமால், பிரமன, சிவனைப போலக் கருமை யும் வெண்மையும செமமையும பெறறு.

கசகூ. இகல : பகை.

வாதை அடர்ந்து வரிபரந்து மைஎழுதிக்
காதை அடைந்து கடைசிவந்தே - ஓதுகலை கஎ0

கற்றவரை எல்லாம கருத்துருககிக காமரசம்
உற்ற அலஙகாரம உட்கொண்டு - சுற்றும

புவிக்குளநிகர் அறற புலவோா தம செஞ்சொல்
கவிக்குநிகா ஆகுமஇரு கண்ணுள - குவித்தமலா

**புருவம்**

சூழஅளகக் கொண்டலுக்கும ஜோதி நுதற்பிறைக்கும்
தாழ ஒளிருமஇந்த்ர சாபமோ - ஆழிவரு

காளம பொதிநதகனற கண்ணெனறுரைக்கும்வடி
வாளின உறைகழற்றி வைததகோ - வாளை

நெருஙகுகடலுமபுலமப நிலநிறப் பார்வைக
கருஙகடலுக கிட்ட கரையோ - பெருஙகபடக கஎஙு

காமன அயிலும கயலும பொருநயனத்
தாமரையின பககத் தரஙகமோ - மாமதனச கஎச

கஎ0. வரி: ரேகை. காதை அடைந்து: காது வரைச சென்று.

கஎஉ. புலவோா கவியைப போல விரிநத பொருள கொணட இரு கண் உடையாள.

கஎங. அளகக கொணடல்: கூந்தலாகிய மேகம. நுதற் பிறை: நெற்றியாகிய சந்திரன. இந்திர சாபம: வானவில். ஆழி வரு: சமுத்திரத்தில தோன்றிய.

கஎச. காளம: நஞசு. பொதிந்து: பெயது. அகன்ற: விசாலமான. வடிவாள: கூரிய கத்தி. உறை: கூடு. வாளை: மீன வகை.

கஎரு. அயில்: அமபு. பொரு: ஒத்த. நயனம: கண். தரங்கம: அலை.

சித்திரமோ காதிசயம் செய்விகரும மாறன்நிம்ப
பத்திரமோ என்னும படிவிளங்கிப் - புத்திதனை கருஎ
வாட்டுசிலை வீர மதவேள மலரமபு
பூட்டுசிலை போலும புருவத்தாள - தோட்டிதழிக

**நெற்றி**

கொந்தார் சடையோன குலவுநுதற் கண்போலச
சிந்தூரம திட்டும திருநுதலாள - அந்தரத்தில்

**கூந்தல்**

ஓட்டமிடும் திணதேர் உதயமார்த் தாண்டன்மேல்
கூட்டமிடும் கஙகுற குழாஙகொலோ - நாடடமுறத கசூ0
தேசுபுனை பங்கயமேல் சேர்மதுக ரத்திரளோ
வீசும முகமதிதோய மேகமோ - ஆசைமதன்
காவணமோ கொன்றைக் கருங்கனியோ காயாவின
பூவணமோ மஞ்ஞைபயில் பூஙகாவோ - தாவுதமிழ

---

கருஎ. காதி : போர் செயது. மாறன : பாண்டியன. நிமப பத்திரம : வேபபிலை. புருவம வடிவத்தில் வேம்பின் இலைக்கு ஒபபிடபபடுகிறது.

கருஅ. தோடு இதழி : இதழகளை யுடைய கொனறைப பூ.

கருகூ. கொந்து : பூஙகொத்து. சடையோன : சிவபெருமான. நுதறகண : நெறறிக கண. சிநதூரம : குஙகுமம. அந்தரம : வானம.

கசூ0. உதய மாாததாணடன் : காலை ஆதவன. கஙகுற குழாம. இருட கூட்டம. நாட்டம : கண்.

கசூக. தேசு: ஒளி. பஙகயம : தாமரை. மதுகரத திரள : வணடுக கூட்டம.

கசூஉ. காவணம : கொட்டகை. மஞ்ஞை : மயில். பூஙகா : மலாச சோலை. தாவு தமிழ : பிற மொழிகளை யெலலாம கலந்து மேலோஙகிய தமிழ.

கல்லார் மனமோ கலவி விலைவாங்க
வல்லார் பொதுமகளிர் வன்னெஞ்சோ - எல்லாரும் கசுங

ஏதென்று அதிசயிக்க இந்திரநீ லத்தில்நறுந்
தாதொன்றி வாசச் சவாதணிந்து - போதொன்றி

நெய்த்துக் கடைகுழன்று நீண்டு சுருண்டடர்ந்து
மைத்துத் தகர மணம்பொதிந்து - மொய்த்துமணம் கசுரு

சோதிக்கும் வண்டும் சுரும்பும்ஆ டிப்பாடிச்
சாதிக்கும் நாடகச் சாலையோ - ஓதத்

துனிநீர் அலைபோலத் துறவோர் அலையப்
பனிநீரால் வாசம் பரவித் - தனியே

வெறும்புகையும் நெட்டுயிர்ப்பு மேஇளைஞர் கொள்ள
நறும்புகையும் சாந்தும் நயந்து - நிறம்புதிய

பைந்தளவும் மல்லிகையும் பனிநீரும் பாரித்தால்
கந்தரத்தில் தாரா கணம்போன்றும் - சந்தமல கசுகூ

---

கசுங. கல்லார் மனம், நல்ல இருட்காடாக இருக்கும்; கூந்தல் அப்படி இருக்கின்றது. வன் நெஞ்சு : வன்கண்மை வாய்ந்த உள்ளம்.

கசுச. இந்திர நீலம் : நல்ல நீல நிறம். "இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சியும்" என்கிறார் கம்பர். நறுந்தாது : நல்ல மணத்தூள்.

கசுரு. தகரம் : மயிர்ச்சாந்து.

கசுசு. வண்டினங்கள் முழுதும் நடனமாடுகின்ற அரங்கோ கூந்தல்.

கசுஎ. துனி : ஒலி

கசுஅ. நெட்டுயிர்ப்பு : பெரு மூச்சு.

கசுகூ. பைந் தளவு : பசிய முல்லை. பாரித்தல் : பெய்தல். கந்தரம் : கழுத்து. தாரா கணம் : நட்சத்திரக் கூட்டம்.

தண்காலும் செங்கமலம் சாத்தினால் மாயவனார்
கண்கால் முகம்கனிவாய் கைபோன்றும் - திண்காதல் கஎ0
கைவண் குருவேர் கலந்தால் வரிஅறல்சூழ்
சைவலத்தின் கொத்துத் தனைப்போன்றும் - இவ்வகையே
வேரிச் செழுமலரும் வில்வேள் கணைமலரும்
வாரிச் சொருகும் மலர்க்குழலாள் - தாரணியில்

**வடிவு**

சாதுரிய வேதாவும் தார்குழலார் ரைப்படைக்க
மாதுரியம் பார்க்கும் வடிவினாள் - ஆதரிக்கும் கஎ௩

---

கஎ0. தண் காலும்: குளிர்ச்சியைக் கக்குகின்ற. செங்கமலம்: செந்தாமரை. கூந்தலிலே செந்தாமரைப் பூக்களைச் சூட்டினால் கருநிறமான மாயவனார் நிறம் போன்ற குழலிலே சூடிய அப்பூக்கள், அத்திருமாலின் கண், கால், முகம், வாய், கை போலச் சிவப்பாகக் காணப்படும். "கண்ணும் திருவடியும் கையும் திருவாயும் செய்ய கரியவனை" என்பது சிலப்பதிகாரம். "கை வண்ணம் தாமரை வாய் கமலம் போலும் கண்ணிணைகள் அரவிந்தம் அடியும் அஃதே" என்பது திருமங்கை மன்னர் திருமொழி.

கஎக. குருவேர்: சிறு வியர்வை. வரி அறல்: கோடுபோல் அமைந்த நீர். சைவலத்தின் கொத்து: பாசிக் கொத்து.

கஎஉ. வேரி: தேன். மலர்களையும் மன்மதன் அம்புப் பூக்களையும் அள்ளிச் செருகும் கூந்தலுடையாள். "முருகிற் சிவந்த கழுநீரும் முதிரா இளைஞர் ஆருயிரும் திருகிச் செருகும் குழல் மடவீர் செம்பொற் கபாடந் திறமினோ?" என்ற கலிங்கத்துப் பரணிச் செய்யுள் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

கஎ௩. வேதா: பிரமா. மாதுரியம்: மிக உயரிய நிலை,

**தன்மை**

மையல் மதவேள் வளநகரி சோதனைக்கோர்
தையல்உரு வாகிவந்த தன்மையாள் - துய்ய களச

**மலை**

தொடரு மழைமேகம் தோய்தலால் ஆழப்
புடவிதனைச் சுற்றும் பொருளால் - படரும் களரு

தளவநகைப் பாவை தரலால் மதிக்க
அளவு படாத அதனால் - கிளரும்எழில் களசு

---

களச. மையல் மத வேள் : மயக்கத்தையும் மதத்தையும் கொடுக்கும் மன்மதன். வள நகரி : வளமான நகரம். காமன் நகர் சோதனை நடாத்துதற்கு என்றே ஒப்பற்ற நங்கையாக வடிவு பெற்று வந்த தகுதியுடையாள் இவள்.

இதுவரை, காதல் கொண்ட தலைவன் காதலிக்கப் பெற்ற தலைவியைக் கால் முதல் தலை வரை விரிவாக அலங்கரித்தான். இனிப் பாட்டுடைத் தலைவனாகிய வருண குலாதித்தனை வாணிகின்றான். மலை தொட்டு ஆணை ஈறாக அவனுடைய தசாங்கச் சிறப்பு மேலே வருகின்றது.

களரு. முதல களசு முடிய உள்ள கண்ணிகள் மலைக்குரிய கட்டுரைக்கும் சிலேடை.

களரு. மழை பொழியும் மேகம் கடலிலும் தோய்கின்றது; மலையினும் படிகின்றது. புடவி : உலகம். அது கடலைத் தனக்கு ஆடைபோல் சுற்றியிருக்கிறது; மலையைச் சுற்றிப் பூமி யிருக்கின்றது.

களசு. தளவம் : முல்லை. முல்லை போன்ற பல்லைப் பெற்ற பாவையைக் கடலும் தந்தது, மலையும் தந்தது. கடல் தந்த காரிகை இலக்குமி, மலை தர வந்த மங்கை பார்வதி. மதிக்கும் அளவுக்குள் கடலும் அடங்காது; மலையும் அப்படியே.

அம்புலிதோற் றத்தால் அமைதருநீ லப்பரப்பால்
விம்பமணிக குன றுபல மேவலால் - உம்பரின்மேல் களஎ
தேங்குவ சிகரத்தால் திண்கோட்டு நாகமே
தாஙகுதலால் மாலைத் தரிகையால் - ஓஙகி
வளஙகுலவு நேமி மகரா லயமபோல்
விளஙகு முனிவன் விதிதத - வளஙகொள்
தமிழின சுவைஎனவே தண்குறிஞசிச செநதேன்
உமிழும பவளமலை உளளோன - கமழும கஅ0

நதி

செழுஙகடுக்கைத் தாராளன செஞசடைபோல் மின்னி
முழுஙகித் திசையனைத்தும மூடி - ஒழுங்கிக
கடல்நீர் பருகிக் ககனமுகடு ஏறித்
திடல்நீடு குனறச சிகரத்து - அடல்நீடு கஅஉ

களஎ. சந்திரன் கடலிற பிறககினறான்; மலையிலும தோனறுகினறான. நீலப பரபபு கடலுககும உண்டு; மலைக்கும மேகம படிதலால் உளது. விமபம: ஒளி. கடலுககுள ஒளிக் கற குனறுகள இருககினறன; மலையிலும அபபொருளகள உள.

களஅ. வசீகரிக்கும தனமை கடல, மலை இரண்டுககும உள. திண் கோட்டு நாகம: வலிய தநததனதை யுடைய யானை. யானை கடல் மலை இரண்டிடஙகளிலும உளது. கடலில் உளளது நீர யானை. கடல் திருமாலைத் தனனுள படுக்க வைததிருககிறது; மலை மாலைககால ஆதவனை வாஙகிக கொளகினறது.

களகூ. நேமி: சககரம். மகராலயம: கடல். முனிவன்: அகததியன்.

கஅ0. குறிஞசி: மலை நிலம். பவளமலை: வருண குலாதிததன மலை. உள்ளோன: உடையோன்.

கஅக. கடுககை: கொன்றை. தார்: மாலை. அத் தாராளன: சிவன்.

கஅஉ. பருகி: குடித்து. ககனமுகடு: வான உசசி. குனறச சிகரம: மலைக குடுமி.

மேகத் திரளகால் விழுந்து பொழியமண்ணும
மாகமும்ஒன் றாக வளர்வெள்ளம - மோகமலர் கஅந

மானைப புணரும வருணகுலா தித்தன்மகிழ
சேனைப பெருககம எனத்திகழ்ந்து - கானில்

விசைகொண்டு கல்லெடுத்து வீசிநடந் தோடித்
திசைகொண்டு காம்பிரம் செயது - மிசைஉந்தித் கஅரு

தணகுறிஞசி வந்தடைநது சமபகமபி டுஙகிவண்டு
பண்குறிஞசி நந்துகொநது பந்தறைந்து - திணகுறிஞ்சி

சந்தனஙக ளைநதுமுந்தி தந்திசிஙகம் எண்கினஙகள
உந்திஒனறு டொனறெதிர்ந்து டைந்தமிழந்த -
வந்திரைந்து

விண்டுமண்டு விண்டடாந்து விண்தொடாந்து
குன்றடைந்து
கொண்டுநினறகுஙகுமஙகொணர்நதெழுந்து-மிண்டுகினற

தந்ததொந்த மெனறுசந்த தஙகழஙகு கொண்டமைந்த
அநதவணடல எஙகுமொணட டர்ந்துசென்று - முந்தி

---

கஅந. திரள கால் : திரண்ட காறறு. மாகம : விண்ணுலகம.

கஅச. மலர்மான : திருமகள. கலைமகளையும கொளளலாம. கான : காடு.

கஅரு. திசைகொண்டு : திக்கெலாமபரந்து.

கஅசு. தண் குறிஞசி : குளிர் வரைநிலம. பண் குறிஞசி : குறிஞசி ராகம.

கஅஎ. சந்தனங் களைந்து : சநதன மரங்களைப் பிடுங்கி. முந்தி : விரைந்து. தந்தி : யானை. சிங்கம : சிமமம. எண்கு : கரடி. உநதி : செலுத்தி.

கஅஅ. விண்டு : மலை. விண்டு : பிளந்து. மிண்டு தல : நெருஙகுதல்.

கஅகூ. தநத தொந்தம : ஒலிக்குறிபபு.

விளைந்த கருந்தினை செந்தினை விஞ்சி
வளைந்த புனங்களை மண்டி - அளைந்து ௧௯௦
வருந்த மனங்குற மங்கையர் ஒன்றி
இருந்தபரண்கள் எறிந்து - நிரம்பிய
குங்கிலிய மும்திமிசும் கொண்டோங்கக் கேகயமும்
பைங்கிளியும் ஓடப் பறந்தோடித் - துங்கமுற்றத்
தாங்கும் மயில்படைத்த தாடாளனைக் கரத்தில்
ஓங்கும் அயில்படைத்த உத்தமனைப் - பூங்கடப்ப
மாலையனை வண்டார் மழைமாடப் பீடத்தின்
மேலயனைக் காவல் விளைத்தானைக் - கோலமதி
ஆறுமுகத் தானை அசுரர் குலம்அழியத்
தாறுமுகத் தானை தொலைத்தானை - வீறுமலர் ௧௯௫
வேரிப் பதாம்புயனை மென்குறத்தி கொங்கைபட்ட
பூரிப்ப தாம்புயனைப் புண்ணியனைச் - சிற்ற
கந்தனைச் சேயைக் கடவுளைச்செவ் வேளை அருள்
மைந்தனைக் கண்டு மனமகிழ்ந்து - முந்தினதிர் ௧௯௭

---

௧௯௨. குங்கிலியம் : குங்கிலிய மரம். திமிசு : வேங்கை மரம். கேகயம் : மயில்.

௧௯௩. தாடாளன் : பெருமையிற் சிறந்தோன். கரம் : கை. அயில் : வேல். கடப்பம் : கடம்பு.

௧௯௪. காவல் விளைத்தான் : சிறை வைத்த முருகன்.

௧௯௫. தாறு : கூட்டம். தானை : படை. வீறு : சிறப்பு.

௧௯௬. வேரி : தேன். பதாம்புயம் : பாத தாமரை. மென் குறத்தி : வள்ளி. பூரிப்ப தாம்புயனை : பூரிக்கின்ற தோளை உடையவனை.

௧௯௭. சேய் : முருகன் பெயர்களுள் ஒன்று; கடவுளின் சேய் ஆதலினால்.

௧௯௩ முதல் இதுவரை குறிஞ்சி நிலக் கடவுளாகிய வேலனைப் பற்றி.

பாலைவனம் மேவியதி பாதகவில் வேடர்அணி
வேலைவடி வாளை அலை மேலுதறி - ஓலமிடு ககூஅ

கூபமஉறை நீரினெடு கூடிவிளை யாடிஅதி
தாபவனம மேவிஅழல் சாடிநிறை - மாபுறவின்

கூடுகளைக் காரகிலைத கோலமுரு டானகள்ளிக்
காடுகளைச சாய்த்திருபபைக் கான்நணுகி-நீடுவிறல் உ௦௦

பாராள ரைபபோல் பகற்சூரை ஆடுவார் -
போராடல் எல்லாம புறங்கண்டு - சீராகி

அந்தரி பிஙகலை அம்பிகை சஙகரி
சுந்தரி விந்தை சுமங்கலை - மந்தர

பார படீர பயோதரி பூதரி
காரணி வாமினி காமினி - திரி

அமலை நிமலை அரிவை தெரிவை
கமல சரணி கவுரி - குமரி

வராகி கபாலி மனோன்மணி சூலி
புராணி சடாதரி பூவை - தராதலத்தோர் உ௦௫

---

ககூஅ. ஓலம் : சத்தம்.

ககூகூ. கூபம : கிணறு. அழல் சாடி : பாலை நில நெருபபொடு போர் செய்து. புறவு : புறா.

உ௦௦. முருடு : மரக கணு. இருப்பைககான் : இலுபபைமரக காடு.

உ௦க. பாராளரைப்போல் பகற்சூரை ஆடுவார்: பாரை ஆளுகினறவாகளைப போலப பகல் கொளளை இடுவார். பாரை ஆளும் வேந்தா வலி கொண்டு குடிகளிடம கவாவது பகற் கொளளை என்பது கருத்து. பகற சூரையாடுவார் பாலை வனத்திலே திரியும் திருடாகள.

உ௦உ முதல் உ௦௫ வரை அமபிகையின பெயர்கள. அவைகள பாலை நிலப பாவைககுக கூறப படுகினறன.

பன்னி அடிவணஙகும பாலைக் கிழத்திஎனும்
கன்னி தழுவக களிகூர்ந்து - நன்னிலமென் உ௦௬
முல்லை புகுந்து முருகு பெருகுநெடுங
குல்லை அணிந்து குழல்எந்தி - எல்லையில்தன்
மன்றல்அள கத்துக்கும் வாளநகைக்கும ஒபபென்று
கொனறையும முல்லையும் கோத்தெறிந்து - வென்றி
திரளபுருஷன நாகையர்கோன் செங்கைக் கொடைபோல்
சுரபிதனை அஞ்சத் துறந்து - குரவையிலே
மண்டு பொதுவியர்தம் மாமே கலைவாரிக்
கொண்டுநெடு மால்போல் குருநதேறித்-
தண்டலையில் உ௧௦
காயா மலர்நிற்கக் காரணமென் எனறுவிழச்
சாயா முறியாத் தமரித்துத் - தூயமலர்
வெண்படாத்தைக்களைந்து வேறுபடாம சாத்துவர்போல்
தண்படா வெண்படாம சாத்திபபோய-வண்பரனுர் உ௧உ

---

உ௦௬ பாலைக கிழத்தி : பாலைக்கு உரியவள்.

உ௦எ. முல்லை : காடு சூழ்ந்த நிலம். முல்லை : துளசி. குழல் : மூங்கில் குழாய்.

உ௦அ. மன்றல் : மணம். அளகம - கூந்தல். நகை : பல்.

உ௦௯. சுரபி : காமதேனு. குரவை : இடைப பெணகள ஆடும கூத்து.

உ௧௦. பொதுவியா : ஆயர்குலப பெண்கள். மேகலை : ஆடை. குருந்து : குருந்தமரம. தணடலை : சோலை.

உ௧௧. சாயா : சாய்த்து. முறியா : முறித்து. தமரித்து : சத்தம் போட்டு.

உ௧உ. படாம் : ஆடை.

நேரிழைவந் தாளென்று நெய்பால் தயிரான
வாரிஎதிர் கொள்ள வந்ததெனப் - பாரிஎனும் உகரு

ஏரோன் வருணகுலா தித்தன்பால நாகையிலே
பாரோர விருந்தருந்தும் பந்திஎனப் - பேராயர்

பாடிதனில் நெய்ச்சாடி பாறசாடி மிககதயிரச
சாடி நிமிடந தனிறசாடி - ஓடிக் உகரு

கடுங்கான் இடைகடந்து கலலைப்பெண் ஆக்கி
அடுங்கான வெம்பணியில் ஆடி - நெடுங்கோட்டு

மாமருதம் சாய்த்து வணங்குவார் நெஞ்சுறைந்து
தாம மணியும் சகடுதைத்து - பூமிஎனும

மின்னை அளந்து விளங்கித தலைநாளில்
தன்னையும் பெற்றஇரு தாளவணங்கி - முன்னி

மருதம புகுந்து வனசம புனைந்து
மருதம களைந்து வளைநது - கருதரிய உகசு

---

உகரு. சாடி : பாத்திரம். நிமிடம தனிற சாடி : நிமிஷத்தில அடித்துககொண்டு.

உகசு. கடுங்கான : கடுமையான கானகம். கல்லைப பெண்ணாககியது அகலிகை கதை. பணி : பாம்பு. பணியில் ஆடியது : காளிஙகன் என்னும பாம்பின் மேல் ஆடியது. நெடுங்கோடு : நீணட கிளை.

உகஎ. மாமருதம : பெரிய மருதமரம், தாமம : மாலை. சகடு : வணடி வடிவமாக வந்த அசுரன.

உகஅ. மின்னை அளந்து: மாவலிபால் உலகு அளந்த வரலாறு. உ०எ. முதல் இதுவரை திருமாலுககும நதிக்கும சிலேடை.

உகக. மருதம : நெல் முதலிய உயர் பொருள் விளையும நன்செய நிலம. வனசம : தாமரை. மருதம களைந்து : மருத நிலப் பொருளகளை வாரி.

எம்பிரான் தேவி எழுந்தருளி னாளனறே
உம்பர்கோன வைத்த உலுபபைஎனப் - பைம்பூகத் ௨௨௦
தாறும இளநீரும தண்கரும்பும் மஞ்சள இஞசி
தேறும் கருணைச செழுஙகிழங்கும் - ஊறிரதத்
தேமா நறுஙகனியும திண்பலா வினகனியும
மாமா தனையின் வளர்கனியும - ஆமலகப
பைஙகனியும வாழைப் பசுங்கனியும் பேரெலுமிச்
சஙகனியும பொற்றமரத் தங்கனியும் - துஙகமலர்ச
சோலைவாய் வண்டுவைத்த சுத்தப பசுநதேனும்
ஆலைவாய்க் கன்னல் அடுபாகும - மாலதியும
பன்னீரும மல்லிகையும பாளையும் பாதிரியும
மன்னும குவளை மதுமலரும - இன்னவகை ௨௨௫
எல்லாம பரவி இருந்த இடந்தோறும
உல்லாச மாக உலாவிவந்து - மல்லாடத்
தாண்டு பரிஏறும் சுததவீ ராதிபர்போல்
பூண்டுசிலை வாளஎடுத்துப போர்தாவி - ாண்டு ௨௨௭

---

௨௨௦. எமபிரான தேவி : செல்வத் திருமகள. உமபர கோன : தேவராஜன். உலுபபை : பெரியோர்க்குப படைக்கும பண்டஙகள. பைமபூகம : பசுமையான பாககு மரம.

௨௨௧. தாறு : காய் நிறைந்த கொத்து. தேறும் : தேறிய. ஊறு இரதம் : ரசம ஊறுகின்ற.

௨௨௨. ஆமலகம : நெல்லி.

௨௨௩. பொன தமரத்தங் கனி : பொன் போன்ற ஒரு மரத்தின் பழம.

௨௨௪. ஆலை : இயநதிரம. கன்னல் : கரும்பு. அடுபாகு : காய்சசிய கட்டி. மாலதி : சிறு செண்பகப் பூ.

௨௨௫. மது மலர் : தேன் சொட்டும் பூ.

௨௨௬. மல்லாட : மற் போர் செயய.

௨௨௭. பரி : குதிரை.

கரைஎங்கும மளளா களித்தார்கக நனனிர்த்
திரைஎஙகும அன்னம செறியப் - பரவியே உ உ அ

நெயதல் நிலமபுகுந்து நெயதல் தடமபடிந்து
மைதவழும புனனை வனமசாயத்துக - கைதைமடல்

சூடிப புளினமெலாம் சுற்றிப பெருமபனையைச்
சாடிப புளினம் தனைஓட்டி - நீடுறற உ௩௦

மாதரஙக முந்திவலை வாணா இளம்பருவ
மாதரஙக முந்திவலை வாயமுகந்து - தாதவிழுந்து

பானலமபு நைந்துவரி பாயமரமசூ ழன்றுவிழ
மீனினங்கள சிந்தியலை வீசிமொண்டு - கானலெஙகும்

ஓடிக் கழிககரையில் ஒலலைப பெடைக்குருகை
மூடிச சுழித்தலையில் மூழகபபோய - நாடிககண்டு

---

உஉஅ. மளளர் : உழவர். களித்து ஆர்க்க : நீர்ப் பெருககுக் கண்டு மகிழநது ஆரவாரம செயயப.

உஉகூ. நெய்தல நிலம : கடல் சாாநத தரை. தடம் : தடாகம. மை : மேகம. புனனை வனம்: புனனை மரக்காடு. கைதை : தாழை.

உ௩௦. புளினம : சோலை. புளினம : புள் இனம், பறவைக கூட்டம்.

உ௩க. மாதரஙகம : பெரிய அலை. வலை வாணர் : வலையிலை வாழகினறவர்; அவா வலையா, அல்லது செமபடவர். மாதா அஙகம உந்தி : மஙகையா உடம பிலே நிரைச செலுததி. வலைவாய முகந்து : வலையை நிர்முகசசெய்து.

உ௩உ. பானல அமபு நைநது : நீலோற்பலம் போனற கண அமபு வருநதி. வரி பாயமரம : கட்டப பட்ட பாயமரம. கானல : கடறகரைச சோலை.

உ௩௩. கழிக்கரை : சதுபபு நில ஓரம. ஒல்லை : விரைந்து. பெடைக் குருகு : பெண நாரை.

அந்த வருணன் அடிவணங்கிக் காணிக்கை
தந்த தரளம தனைப்புனைந்து - செந்தமிழக்கு
மாறுத செஙகை வருணகுலா தித்தனென று
கூறு தவர்போல் குறைவுற்றுப - பேறுன உ௩௫
சஙகம் திகழநாகைத் தாருவைச்சே ராதவர்போல்
பஙகம புனைந்து பயன்எயதிப - பொங்குதுழாய்த்
தேமபதும நாபத திருமால்போல் சங்கேந்திப
பாம்பணையின மேவிப படியளந்து - மேம்படுசொல

நாடு

அச்சுதனூர் சஙகேந்து அமலனூர் மன்மதனை
மெயச்சுதனு கபபடைத்த வேந்தனூ - நச்சரவில
கண துயிலவார் மூதண்டம காத்தருளவார் தேனசொரியும்
வண் துளவார் சீரங்க மாநகரும - எண்திசையோர்
வந்திககும தென்குடந்தை மாநகரும் தேவரெலாம
சிந்திக்கும மாமகஞசேர் தீர்த்தமும் - முந்தவே உ௪௦

---

உ௩௪. தரளம : முதது.

உ௩௫. ஆறு, கடைசியாகக் கடலில் விழுந்து குறைந்துவிட்டது. எபபடி? தமிழிக்கு உதவும் வள்ளல் வருண குலாதித்தனைப் பாடாதவர்போல.

உ௩௬. நாகைத் தாரு : நாகையிலுள்ள கறபகம. அத்தாருதான் வருண குலாதித்தன. பங்கம் : கேடு.

உ௩௮. மெய்ச் சுதன் : உண்மை மகன்; வேந்தன : திருமால். திருமாலுக்கு மனமதன மகன் முறை. அரவு : பாமபு.

உ௩௯. மூது அண்டம் : பழமை வாயந்த உலகம்.

உ௪௦. வந்தித்தல் : வணங்குதல. குடந்தை : குமப கோணம. தீர்ததம : மகா மகக குளநீர.

தைபபூசம ஆடத தகுமெனனை வெண்நீறு
மெய்பபூசச் சொன்ன விடைமருதும - எபபோதும் உசக

ஏத்துகின்ற சுந்தரனார் ஏவஇரு ளில்தூதாய்
ஆத்திமுடி யோன்சென்ற ஆரூரும - வாயத்த

திருப்பதிகள உளள்வெலாம சேவிததுச செந்தேன்
மருபபதியும தண்டலையுள மன்னி - விருபபமுடன்

வேந்தா கிளைதழைக்க வேதாக மந்தழைக்க-
ஆய்ந்த வணிகர் அறந்தழைகக - ஏயநத

உழவர் குலந்தழைக்க உண்ணமுர்தம ஊறும
விழவும் திருநாள விழாவும - அழகாம உசரு

மனுநெறியும் செல்வமும வணதமிழப்பா ராட்டும்
அனுதினமும் தனமா சனமும - தினகரனார்

திணமைக் குலத்துதிதத செமபியர்கோ மான்புரக்கும்
வண்மையுடைச சோழ வளநாடன - பண்மருவும்

**நகர்**

பாடலும் நாடக சாலையும் பைநதொடியார்
ஆடலும சூழகின்ற ஆலயமும் - நீடு

பணிக்கோ புரநிரையும பைம்பொன மதிலும
மணிககோ புரமேடை வைபபும் - கணககாயர் உசகூ

---

உசக. விடைமருது : திருவிடைமருதூர்.

உசஉ. சுந்தரனார் : சுந்தர மூர்த்தி சுவாமிகள. ஆத்திமுடியோன் : ஆத்தி மலா சூடிய சிவனார். ஆரூா : திருவாரூா.

உசரு. மருப் பதியும் : வாசனை படியும். தண்டலை : சோலை.

உசகூ. தினகரன் : சூரியன.

உசஎ. செம்பியர் கோமான் : சோழ மன்னன். பண் : இசை.

உசகூ. நிரை : வரிசை. கணக்காயர் : நூல் சொல்லிக் கொடுப்போர்.

கூட்டமும் முத்தமிழின் கோதாட்டும் நல்விருந்தின
தேட்டமும் பாராட்டும் சீராடும் - கோடு உ௫௦
வனசத் திரமுகபபும மாமறையோர்க செல்லாம
தினசத் திரமுதவும சீரும - அனதின்
குலந்தா மரைமேல் குலாவும குளமும்
நலந்தான் மிகுநத நதியும - அலர்ந்த
அளகா புரியும் அமரேசன ஊரும
பளகாகச செலவம பரித்து - வளமேவும
செந்நெல்லும பூகமும தினகருமபும் சந்ததமும்
பனனுவள நாகைப பதியினன் - ஒனனலரைச

**மாலை**

சாடுகினற வேல்வீரன் தனமாாபு அனுதினமும
சூடுகினற வாகைத் தொடையினை - கூடலரைப உ௫௫

**பரி**

பேயுங் கழுகும பெருவிருந்து கொண்டாடப
பாயும கவனப பரியினை - ஆயும உ௫௬

---

உ௫௦. முத்தமிழ் : இயல், இசை, நாடகம. கோடு : சிகரம.

உ௫௧. வன சத்திரம : வனபபொருட்சாலை. மறையோர் : மறைபயில மக்கள.

உ௫௩. அளகாபுரி : குபேரன ஊா. அமரேசன் ஊர் : அமராவதி. பளகாக : குறைவு உடையதாக. பரித்து : தாங்கி.

உ௫௪. சந்ததமும் : எபபொழுதும. பன்னு : நெருஙகுகினற. நாகைபபதி : நாகைப்பட்டினம என்ற ஊர். ஒன்னலர் : எதிரிகள.

உ௫௫. சாடுதல் : அழித்தல். வாகைத் தொடை : வெறறி மாலை. கூடலா : பகைவா.

உ௫௬. பாயும் : பாயகின்ற. கவனம் : வேகத்தையுடைய. பரி : குதிரை. ஆயும : ஆராயும.

### யானை

அருந்தமிழோர் சொறபடியே ஆறுறுப்பும் பாரைப்
பொருந்திமதம் மூன்றும பொழிந்து - திருந்தார் உருள
படைக்கலந் தூளாககிப பாகரைக்காயந் தோடி
நடககுமமன வேகமெென நாடி - இடிக்கும்
உருமேறு எனமுழஙகி ஒனபான் முழம்பெற்று
அருமேக நிரை அருந்தி - வருமேரு
எனனவரி வண்டின இனந்தொடரக கோபமே
மன்னும அயிரா வதத்தினன் - மன்னி உகூ0

### கொடி

இலகுக.-ற் பாரில் எதிரில்லை என்றே
குலவு மகரக கொடியான - நிலைமைபெறும்
ஈகை வதுவைஜெயம எனறேதன் மூன்றிலிடை
மோகனுசெய் மூனறு முரசினன் - நாகமதி

### ஆணை

சூடுகின்ற செயயசடைச் சோதியார் அமபலத்துள்
ஆடுகினற நாதர்திரு ஆணையான் - நீடும உகூரு

---

உருஎ. ஆறு உறுபபும பாரைப் பொருந்தி: ஆறு அங்கஙகளும பூமியைத் தொட்டு. திருந்தார : மாறறூர்.

உருகூ. உருமு ஏறு : ஆண் இடி. ஒன்பான் முழம் : ஒன்பது முழ உயரம. வரும் மேரு : நடககும் மேரு மலை.

உகூ0. அயிராவதம. இநதிரனது வெளளை யானையின பெயர்.

உகூக. மகரக் கொடி : மீன் கொடி.

உகூஉ. ஈகை : கொடை. வதுவை : மணம. ஜெயம் : வெற்றி. இம்மூனறினையும முழககும முரசுடையவன். "வண்மை எனறும, தோன்றவரு வெறறி எனறும சூடிய கல்யாண மெனறும, மூன்றாய முழஙகும் முரசினன்." எனறு சேதுபதி விறலி விடு தூதிற் கூறப்படுவது இதனோடு பொருந்துவது.

உகூரு. நாதர்திரு ஆணையான் : சிவபெருமான் வழிபபடி ஆணை செலுததுபவன.

கடலுக் கரசன் கனங்குழலார் தீட்டும்
மடலுக கிசைந்த வடிவன - அடலுக்குத் ௨௬௪
தோற்றியவேல் வேந்தர் தொல்விருதெலாம்இமைப்பில்
மாற்றிய வீரவடி வாளினன - ஏற்றுக் ௨௬௫
கொடியான் தனககுக் குலககொடியை நலகி
வடியாப புகழபடைத்த வ்ள்ளல் - படியாளும்
கோமான் எனவாழ குருகுலத்தோர் கோத்திரத்தில்
மாமால் அனைய மநுதுஙகன - பூமீது
மண்டலிகர் கொண்டாடும மானகுல சிலபரன
தண்டமிழவல் லோர்கிளையைத் தாங்குவோன - [மண்டலத்தில்
தஞசமென வந்தோரைத் தபபாமல் எபபொழுதும
அஞ்சல்எனக் காககும அபயத்தான் - கஞசத
திருவளரும மாாபன் திருமலை ராய
வருணகுலா தித்த மகிபன - சுரபி ௨௭௦

---

௨௬௪. கனம குழலார்: கனதத கூந்தலையுடைய காரிகையார. தீட்டும: எழுதும. அடல்: பெருமை.

௨௬௫. இமைபபில்: கண் மூடுவதற்கு முனனே. ஏறு: விடை.

௨௬௬. கொடியான்: கொடியையுடையவன; அவன, சிவன். குலக்கொடி: பார்வதி. மலைமகள பிறநத குலம உடையான வருண குலாதித்தன என்பது கருத்து. வடியா: வற்ருத. படி: பூமி.

௨௬௭. மாமால்: கண்ணன. மநுதுங்கன்: மககளில் சிறந்தவன.

௨௬௮. மண்டலிகர்: அரசர். சிலபரன்: ஒழுககத்தில் மேமபட்டவன. கிளை: சுறறம. மண்டலம: உலகம.

௨௬௯. தஞசம: அடைககலம். அஞசல்: பயபபடாதே. கஞசம: தாமரை.

௨௭௦. திருவளரும் மாாபன: மகா விஷ்ணு. சுரபி: காமதேனு.

அனைய கொடையான அவதியிடா த்யாக
கனக வனச கரத்தான - அனவரதம் ௨௭௧
கோனேரி ராஜ வருண குலாதித்தன்
தானு பரண ஜயதுங்கன - தேனும்
தாரான கிளைதழைக்கத் தந்த திருப்புதல்வன
வீரா கரனான வேற்கரத்தான - சீரார்
வருணகுலா தித்தனுக்கு மைந்தனென வாழ்வு
தருமபிரா மனகனக தாரு - திருமருவும்
வள்ளல் அனையகொடை மங்காமற் காத்தானுக்கு
உள்ள திருத்தமையன உத்துங்கன - தெளளும் ௨௭௫
இருமரபும துய்யான இயல்இசைகள வல்லான
ஒருமொழியே சொல்லும உதாரன் - பொருசமரில்
வாங்கு சிலைவிஜயன மாரத்தாண்டன வாளபிமன
ஓங்கும அடல்மா ஒளிருதயன - தீங்குநெறி ௨௭௭

௨௭௧. அவதி : எல்லை. கனகம : பொன். வனச கரத்தான: தாமரையனைய கையுடையான்.

௨௭௨. தானுபரணன : தானத்தையே ஆபரணமாகப் பூண்டவன. கோனேரி ராஜ வருண குலாதித்தன, பாட்டுடைத் தலைவனின தநதை.

௨௭௪. கனகதாரு : பொன காயககும மரம்.

௨௭௫. காத்தான எனபவனுககு இவன அண்ணன். உத்துங்கன : உயாசசியுடையவன.

௨௭௬. இரு மரபு : தாய தந்தையரின. இரு வழி. ஒரு மொழி : ஒரே பேசசு.

௨௭௭. வாங்கு சிலை : வளைந்த வில். விஜயன: அரச்சுனன. மாரத்தாண்டன : சூரியன. வாள அபிமன : வாளில வல்ல தனஞ்செயன மகனாகிய அபிமனயு. அடல்மா : வெறறிக குதிரை.

சொல்லாத ஆக்கினைக்குச் சுகரீவன் மூதண்ட
வில்லாளன வெண்ணீறறு மேனியான - சல்லாப உஎஅ
மாதாஇரு கண்ணும மலாமும திறைகொளளும
பூதர வீர புஜத்தினை - ஓதும
தரணிபரி பாலன் சமரமுக வீரன
கருணை பரிமளிக்கும் கண்ணன் - பரவும் உஅ௦
அடித்தவருக் காதாரன் அனனசத்ர சோமன
கொடுத்துவழி காட்டும் குரிசில் . தொடுத்துவிடும்
பூந்தா மரைமுதல்ஐம பூவாளி யுமகரும்பும
ஏந்தாத செவ்வி எழிற்காமன் - மாந்தாதா
ஆருந் தரிசித் தளவே அவரவர்தம
பாரம பரையறியும் பண்பாளன - தீரன்
அனகன அபயன் அமலன அசலன்
கனக சரண கமலன - நினைவும உஅச

---

உஎஅ. வெண்ணீற்று மேனியான : திருநீறு பூசிய திருமேனியன.

உஎகூ. திறை : கபபம. பூதரம : மலை. புஜம் : தோள்.

உஅ௦. தரணி பரிபாலன : பூமியைக் காபபவன. சமரமுகம் : போர்முனை.

உஅஉ. மலரமபும் கருமபு வில்லும தாஙகாத அழகிய மனமதன.

உஅரு. யாரையும கண்ட மாத்திரத்தில அவரவர் குணம செயல் ஆதி எல்லாவற்றையும ஊகித்தறியக் கூடிய அதி சாமர்த்தியவான.

உஅச. அனகன : அழகன. அபயன : அபயங கொடுபபவன். அமலன : குறறமற்றவன. அசலன் : சலிபபில்லாதவன. கனக சரண கமலன் : பொறறுமரைத திருவடியான.

சதுர மொழியும மரபும் இனிய
மதுர விரக சரசன் - அதுலன் உ அரு
இளமை வயதில் இயலும் இசையும்
வளமை புனேயும மகிபன - அளிகொள
தருமம உரிமை தகுதி மிகுதி
அருமை வரிசை அமைவு - பெருமை
உடையன் இனியன உலகில் எவரும்
அடைய விழையும அழகன - மடல்இதழித்
தாமச சடிலனமபு சாத சரணனன்று
காமப பயலேவென்ற காளகண்டன் - தேமுற்ற
மாலேக் குழலியங்கன மாணேக கரததணிந்த
கோலப் பரமனன்பு கூர்துஙகன் - மேலிட்ட உகூ௦
கோரக் கடினகுமப கோல த்ரிகடதுஙக
வீரச சமரதந்தி மேலுதயன் - நேருற்ற
சற்புருஷ மேருவர சாககுமண வாளனிறை
அறபுத சொரூபனஅகி லபபிரசன - நற்பதுமை
ஒககவிளை யாடுபவன் உததமாகி பாசரிதன
மைகொடைகு லாவுமொரு வச்ரதரன - மிககதொரு

---

உ அசு. அளி : கருணே.

உ அஅ. இதழி : கொனறை.

உ அகூ. தாமம : மாலே. சடிலம : சடை. அமபு சாதம: தாமரை. பயல்: எமப் பயல. காளகணடன: நஞ்சைக கழுத்திலே பெறற சிவன.

உகூ௦. *குழலி பஙகன் : உமையைப பாகத்திலே பெறறவன. மேல் இட்ட : உரித்துப போத்திய.

உகூக. தரிகடம : முமமதம. சமரதந்தி : போர் யானே.

உகூரு. மைகொடை : மாரி போனற வண்மை.

துட்டகுல காலனஒரு சொறகபடி லாகிருபன்
வடடஉல காளுமமகி லபரபலன - கட்டளேசேர் உகூச

வளளல் இருபத் திரணடாக மாநிலததோர்
எளளரிய சீமூதம எடடாகத - தெளளுதரு உகூரு

ஆறுகச சஙகத்தார் ஐமபதினமர் ஆகமதி
விருக வந்துதித்த வேல்வீரன - பேரும

அருணநெறி சேகரததான அசசுத ராசப
வருணகுலா தித்த மகிபன - கிரணமிகும

காாமதிதத நறகொடையான காதலுட னேசகர
பார்மதித்த நாகைப பசுஙகாவில - ஏாமதித்த உகூஅ

---

உகூரு. தலேஎழு வளளல, இடைஎழு வள்ளல, கடைஎழு வளளல என முன்னர் மூவேழு இருபதொரு வளளல இருந்தனர்; இபபோது வருண குலாதித்தனைச சோத்து இருபததிருவர் ஆகிவிட்டனர். சீமூதம் ஏழை இவன எடடாககிவிடடான. சீமூதம : மேகம. தெளளு தரு : கேடடது கொடுக்கும தேவமரஙகள.

உகூசு. தேவதாரு, இதுவரை ஐந்தே இருந்தன. அவறறை ஆறுக உயாத்தி விடடான இநநாகைப பதியான. மதுரையிலே சங்கம இருநது தமிழ ஆராயந்த சிவ பெருமான உளளிடட நாறபததொனபது புலவர்கள இபபோது ஐம்பது போ ஆகிவிட்டனா, இத தென நாகைக் கோமானேயும சோதது.

உகூஎ. அருண நெறி : செமமை வழி. கிரணம் : ஒளி.

உகூஅ. காா : மேகம. நாகைபபசுஙகாவில் : நாகை நகரப் பசுமை மிகக பூஞசோலேயில்.

(வருண குலாத்தித்தனே இதோடு ஒருவாறு விடடு, இனி முதலில் வர்ணிககப படட அநதக கட்டழகியிடம போகவேணடும். நாகைப பசுஙகாவில்தான அந்த மோகினியை அவன கணடது. அவள வயமாகி அழியும அவன பரிதாப நிலேயைப பாாககலாம.)

## காட்சி

பொன்போல் மரகதம்போல் பூமயில்போல் வானுலவு
மின்போல் தரள விளக்குப்போல் - என்போல்வார் ௨௯௯
ஆருயிர்போல் தெய்வ அரம்பைபோல் ஆவிகொள்ளும்
சூரியன் மாதர் சுவடுபோல் - கூரியஎன்
கண்போல் கவுஸ்துவம்போல் காகோ தரநாட்டின்
பெண்போல் ஒளிரும்பர வாளம்போல் - நண்போதும்
சித்ரமுயிர் பெற்ற செயல்போல்வி சித்திரம்போல்
அத்ரமதன் செங்கோல் அரசுபோல் - முத்திறமாய்த்
தோய்ந்த தமிழின் சுவைபோல் அரன்விழியால்
சாய்ந்த அரசு தழைக்கவே - ஆய்ந்துவரும்
ஏந்திழைபோல் முக்கனிபோல் இன்னமுது போல்மதுரம்
சாய்ந்து நறுங்குழற்கிழத் தளாடி - ஏந்தும்
இரண்டு குடம்போலும் இருதனங்கள் தாங்கி
மருங்கு துவண்டு வருந்த - நெருங்கிவந்து
நிற்பாரைக் கண்டு நெடிதுயிர்த்துத் தெய்வமே
இப்பாரில் வந்தஇவர் யாரென்று - பொற்பாமஎன் ௩௦௬

௨௯௯. மரகதம் : பச்சை. தரளம் : முத்து.

௩௦௦. தெய்வ அரம்பை : தெய்வப் பெண். கூரிய : கூர்மையான.

௩௦௧. கவுஸ்துவம் : திருமால் அணியும் ஒரு மணி. காகோதரநாடு : நாகர் வாழ் லோகம். அந்நாட்டுப் பெண் : நாக கன்னிகை.

௩௦௨. அத்ரம் : அஸ்திரம். முத்திறம் : இயல் இசை நாடகம் என்னும் மூன்று வகை.

௩௦௩. அரன் விழி : சிவனின் நெற்றிக் கண்.

௩௦௫. மருங்கு : இடுப்பு.

௩௦௬. நிற்பாரை : நிற்கின்ற அணங்குகளை. நெடிதுயிர்த்து : பெருமூச்சுவிட்டு.

நெஞ்சம கலங்கி நினைவழியும் வேளையினில்
கஞ்ச மலரடியும் கண்இணையும் - தஞ்சமென ௩௦௭
அஞ்சல் புரிய அதுவே வரமாக
வஞ்சம அறமகிழந்து வாபதிறந்து - விஞசலுறும

**காதற்பேச்சு**

தேனே மதன் திரவியமே செஙகமல
மானே அநுராக வல்லியே - கான்உறும
கொந்தளக பந்தி குலைநதாடக குனறின்நிமிர்
சந்தளவு பாரத் தனமாட - உந்திஎழும
வளளை இரு தணடின மகரக குழையாடப
புள்ளணைய வேறகண புரண்டாட - மௌள
மருஙகுல்ஒசிந் தாட மணிவடங்கள ஆட
அருஙகமல மாமுகமவோ வாடப - பெருஙகழுஙகோடு
அமமனைபபந் தாடி அடியேன மருணடாட
இம்மனையில ஆடும இயல்இருக்கத - தொமஎன்று ௩௧௩

௩௦௭. தஞசம என : அடைககலம என்று.

௩௦௮. அஞசல புரிய : அபயங கொடுபப. விஞசல் உறும : மேமபாடு உறற.

௩௦௯. அநுராகம : ஆசை. கான் : மணம.

௩௧௦. கொந்தளகபந்தி : கொத்தான கூந்தல் வரிசை. குனறின நிமிர : மலையைபபோல நிமிரநதிருக கினற. சந்து அளவு : சநதனம அபபிய. பார : பெரிய.

௩௧௧. வளளை : காதுககு உபமானமான ஒரு இலை. குழை : காதணி. புள : வண்டு.

௩௧௨. வோவாட : வியாவை அருமப. கழுஙகு : பந்துபோனற விளையாடும கருவி.

௩௧௩. அமமனை : அதுவும் கழுஙகு போனற விளையாடும கருவியே. மருண்டாட : மயங்கி ஆட. 'தொம' ஒலிக் குறிபபு.

வட்டத்தில் பாடி மணிஊசல் ஆடுவீர்
இட்டத்தி லேஇருகக எணணீரோ - துடடமதன

அமபும உமதுவிழி அமபும் மிகபபொருதால்
நமபுமடி யேறகேது நன்நுதலே - கொமபில் ௩௧௫

குயிலால் நெடிது கொதிக்குமதிக் கோடை
வெயிலால் வெதுமபி விடவோ - புயலார்

உமது குழற் காவணத்தின் உற்ற நிழற்கீழ்
அமையும இடந்தந் தருளீர் - எமைமருவிக

கொஙகையா னைககோட்டால் குததாமல் சித்தசனுர்
வெங்கையா னைககிடுதல் மேமபாடோ - திஙகளமுகம்

காட்டினீர் நானுமஅது கண்டேன மயல்பூட்டி
வாட்டினீர் எனனை மறருசெயதீர் - காட்டுக்கு

எறித்தநில வாக்கினீா என்வசனம மாயக
குறைத்தமரம ஆனேன கொடியேன - மறித்தோர் ௩௨௦

அருளவசனம கூறுவதும அத்திபபூ ஆமோ
மருளவசனம யானமொழிதல் மாண்போ-பொருளை ௩௨௧

---

௩௧௫. அடியேறகேது: எனக்கு வாழவு ஏது. கொம்பு: மரக்கிளை.

௩௧௬. புயல்: மேகம.

௩௧௭. குழற் காவணம்: கூந்தலாகிய கொட்டகை.

௩௧௮. கொஙகை யானைக் கோடு: கொங்கையாகிய யானைத் தந்தம். சித்தசனுர்: மனமதனுர். அவனகையிலுள்ள யானையாவது, யானைக்கு வேழம எனறு ஒரு சொல் உண்டு. வேழம எனருல் கருமபு என்பது பொருள். கருமபு மதன வில்.

௩௧௯. மறம செயதிர்: மறக்கருணை செய்தீா.

௩௨௦. மாயக் குறைத்த மரம: பட்டுபபோக வெட்டிய மரம. மறிதது; தடுத்து. ஓர்: ஒரே ஒரு.

௩௨௧. அருளவசனம: கருணைப பேசசு. அத்திப் பூ, அபூாவமாகவே பூககும. அததி பூத்தாபபோல என்பது பழமொழி.

மொழியீா மொழிநதால் முத்துதிரு மோகறபு
அழியீர் அதனல் அண்ங்கே - செழியீர் ௩௨௨
மதன்உபதே சமபண்ணி வாழவிப்பீர் என்றன்
விதனமெலாம் மாறி விவேகம - முதலாப்
பணிவாருக் காசைநெடும் பாமபுவிஷங் கொண்டால்
மணிவாய மருந்துதவ மாட்டீரோ - தணியாத
வல்இருமபும கல்லும வயிரமஒவ்வொன றுக்கிளகும்
புல்இருந்து வீதி புறப்படினும - வல்லமையால் ௩௨௫
எப்படிசொன் ஞலும இளகாது உமதுமனம
மைப்படியும் கூந்தல் மடந்தையீர் - இப்படியில்
உமநெஞ்சம என்நெஞ்சாய் உற்று நடுநடுங்கும
எனநெஞசம உமநெஞ்சாய எயதாதோ - முன்னம்
உடுக்கை இழந்தவன் கைபோல ஆஙகே
இடுக்கண் களைவதாம் நட்பென்று - எடுத்ததிரு
வள்ளுவனா் சொன்னகுறள் வாராதோ வந்தாககால்
எளளளவும நெஞசம இரங்காதோ - கள்ளமதன்
செஙகோலும ஆக்கினையும செல்லுமோ நீமுனைந்தால்
பைங்கோ கனகமஉறு பாவையே - இஙகேதான ௩௩௦

---

௩௨௨. செழியீர் ; செழுமையானவரே !

௩௨௩. விதனம : வருத்தம்.

௩௨௪. ஆசைப் பாமபின நஞ்சு தலைக்கேறிவிட்டது. மணிவாய் மருந்து - செஙகனிவாய் இதழ் அமுதம் தர மாட்டீரா ?

௩௨௭. உஙகள மனம என் மனம் ஆகி என் மனம் உங்கள் மனம் ஆகக்கூடாதா ?

௩௨௮. உடுககை : ஆடை. இடுக்கண் : துன்பம்.

௩௩௦. ஆககினை : ஆணை. கோகனகம் : தாமரை. அதில் இருக்கும் பாவை இலக்குமி.

தாதத்வம் சொன்னேனைத் தாங்கவோ நாமினையீர்
காதல் தவிர்ந்ததில்லை இன்பமோ - சீதளித்து ௩௩௧
வாசமிலாக் காரும் வண்ணம்விளர்த்துத் தேய்பிறையும்
பூசல்இல தேல்குனியாப் பொற்சிலையும் - ஆசளவும்
தைத்துப் பிளக்கறியாத் தண்ணளியி லாவேலும்
வைத்த பயத்தினுறு வள்ளையும் - மொய்த்தநறை
கூடியமென் சிற்றிளங்கால் கொண்டறிகி லாக்குமிழும்
ஆடை அமுதுதவா ஆம்பலும் - வாடிக்
குவிந்தலகும் தாமரையும் கோடுமுகச் சங்கும்
அவிந்துவளா வெய்தும் அமையும் - சிவந்தகுறி ௩௩௫
காட்ட அறியாத காந்தளும் குங்குமச்சேறு
ஆட்டப் புளகித்து அறியாத - கோட்டானைக் ௩௩௬

---

௩௩௧. தாதத்வம் : அடிமை நிலை. சீதளித்து : குளிர்ந்து.

௩௩௨. வாசமிலாக் கார் : மணமில்லாத மேகம். வண்ணம் விளர்த்துத் தேய் பிறை :- நிறம் வெளுத்துத் தேய்கின்ற சந்திரன். பூசல் இலதேல் குனியாப் பொற் சிலை: போர் இல்லையானல் வளையாத அழகிய வில். ஆசு அளவும் : அடிப்படை வரையும்.

௩௩௩. வேல் : வேலாயுதம். பயம் : நீர். வள்ளை : ஓர் கொடி. நறை : தேன்.

௩௩௪. மென் சிற்றிளங்கால் : மென்மையான இளம் தென்றல் காற்று. ஆடை அமுது : ஆடைப்பால். ஆம்பல் : செவ் ஆம்பல் பூ.

௩௩௫. கோடுமுகச் சங்கு : வளைந்த முகத்தைக் கொண்ட சங்கம். அமை : மூங்கில்.

௩௩௬. காந்தள் : காந்தட்பூ. புளகித்தறியாத : மயிர்க்கூச்செய்தி அறியாத.

கோடும ஒரு வழியில கூடாக கருமபாமபும
பாடுகரு தாதவட பத்திரமும - ஆடவாகள ௩௩எ
தக்கமனம வேருகித் தாஞசுழல வேஙிலையாய்
திறக அறியாத நீாசசுழியும - விற்கோன
நிலைப்பாடு மேவாத நேரிழையும முன்பு
செலபபா கரையுடைய தேரும - குலைக்குறிய
வாழையுங் காஞ வளையில் விழுஞெண்டும்
தாழும வராலும சரிகுறையில் - வீழும ௩௪0
தராசுமடி பட்டுத தளர்பந்தும செமமை
இராதவியற் கூர்மத் தெழிலும - பராமரித்தே
பத்து மதியும் பலவடுவாய்க் காயாமல்
மதநியத்தில் வந்துதவும மாந்தளிரும - மொயத்துமலர்
நீண்டகுழல் நெற்றி நெறிபுருவம கண்காது
காண்தகைய நாசிவாய கந்தரமதோள - பூணடகரம் ௩௪௩

௩௩எ. கோடு : தந்தம. கருமபாம்பு : கரிய நாகம; இது வயிற்று மயிர் ஒழுங்குக்கு உபமானம். பாடு : பெருமை. வடபத்திரம : ஆலிலை.

௩௩அ. நீர்ச்சுழி : நீாச சுழறசி; இது கொப்பூழுக்கு உவமை.

௩௩௯. நேர்இழை : நேரான நூல்; இது இடைக்கு உவமானப பொருள். குலை : தாறு. குறிய : சிறிய.

௩௪0. வாழை, துடைக்கு ஒப்பு. ஞெணடு: நணடு. சரிகுறையில் : சமம குறைந்தால். வீழும : தாழும.

௩௪௧. தராசு பரட்டுக்கும், பந்து குதிக்கும், ஆமை புறஙகாலுக்கும உவமானஙகள. கூர்மம : ஆமை.

௩௪௨. பத்து மதி, பத்து விரல்களுக்காக. மாந் தளிர் உளளஙகாலுக்கு.

௩௪௩. குழல் : கூந்தல். நெறி : அடர்ந்த. நாசி : மூக்கு. கந்தரம் : கழுத்து.

கொங்கைஉ ரோமம குளிர்உ தரம உந்தி இடை
தங்கு நிதம்ப மகவான் தண்முழந்தாள் - துங்கக் ௩ ௪ ௪
கணைக்கால் பாடுகுதிக காலபுறந்தான இன்பம்
கணிக்கும்எழில் உள்ளங்கால கடகே - இணக்கிப
பெரியோர்கள் எல்லாரும பேசும அருள்போல்
சரியோத என்றும தகுமோ - அரிவையே
ஓடாத மானே உரையாத செம்பொனனே
வாடாத பூவே மரகதமே - தேடக்
கிடையாத பஞ்சவர்ணக கிள்ளையே கோது
படையாத புல்லகண்ட பாகே - நடைஆடும
சித்திரமே காமன திரவியமே மோகநற்ச
முத்திரமே கட்டாணி முத்தமே - அத்திரவேள
ஆகமமே வாழ்வே அரசே அதிமதுர
போகமே யானசெய்த புண்ணியமே - மோகினியே ௩ ௫ ०
கணணே விரகக கருவிள மேஅமுதப
பெணணே கலவிபர தாபமே - ஒண்நுதலே
கேகயமே எனறெனறு கீர்த்திபபேன் வாழஅநு
ராகதியா கமதந்தால் ஆகாதோ - வேகமதன் ௩ ௫ ௨

---

௩ ௪ ௪. உதரம : வயிறு. உந்தி: கொப்பூழ். நிதம்பம : குறி. கவான : துடை.

௩ ௪ ௫. இணக்கி : பொருத்தி.

௩ ௪ ௬. தகுமோ : தகுதியாகுமோ; தகாது என்பது கருதது அரிவை : பெண்.

௩ ௪ ௮. கிள்ளை : கிளி. கோது : குற்றம். புல்ல கண்டம : வெல்லம.

௩ ௫ ௧. கருவிளம : கருவிளங்கனி.

௩ ௫ ௨. கேகயம : மயில். கீர்த்திப்பேன : புகழ பாடுவேன். அநுராகம : ஆசை.

காவிக் கணையும் கரும்புவில்லும் நேர்தந்தால்
சேவித் துவகையாச் சேரேனே - பூவுலகில் ௩௫௩
சொணமருவு நின்கொங்கைத் தூக்கத்தில் என்னை
[வைத்தால்
மன்மதனார் கொல்லவசம் ஆவேனே - பொன்மயில்போல்
நின்றமா னேநீர் நிலமேலே நின்றபதம்
கன்றினல் என்ஆவி கன்றுதோ - ஒன்றியரை
மாத்திரை இன்பம் மகிழ்ந்தெனக்குப் பாலித்தென
கோத்திரமெல் லாமடிமை கொண்டருளீர் - பூத்திகழும்
தேனே பிறக்கும் ஜென்னமெல்லாம் யானடிமை
தானேன மேல்திருக்கண் சாத்துவீர் - மானனையீர்
காத்தானை மார்பிற் கமலா சனத்திருவைச்
சேர்த்த வருணகுலா தித்தனைச்சென்று - ஏத்தி
மகராஜன் என்றுரைக்க மாட்டாதார் செல்வம்
நிகராமோ வாலிபத்தின் நேர்தாம் - இகலாகி
மோனமே பண்ணி முனிந்திருந்தால் வீணிலே
போனநாள் மீண்டுவரப் போகுதோ - தேனனையீர் ௩௬௦
மாகோபம் உண்டேல்என் மார்மீதும் தோள்மீதும்
ஓகோதாள் கொண்டுதைக்க ஒண்ணுதோ - கோகிலமே

---

௩௫௪. துர்க்கம் : காவலமைந்த அரண்.

௩௫௫. கன்றினல் : வருந்தினல். ஒன்றி : பொருந்தி அரை : ஒன்றில் பாதி.

௩௫௬. பாலித்து : அருள்செய்து.

௩௫௮. கமலாசனத திரு : தாமரைத் தையல்.

௩௫௯. நாகைக்கோனைப் புகழாதார் செல்வம் விரைவில் அழிந்துவிடும்; அதற்குக்கூட நீடாகாது வாலிபப் பருவம். அதனிலும் விரைந்து இளமை போய்விடும்.

௩௬௧. மாகோபம் : பெருஞ்சினம். தாள் : கால். கோகிலம் : குயில்.

மன் ஆணை வைததாலும வையுமஇனி உமமாணை
என் ஆணை கோபம்எனக கில்லையே - மினனாணையீர ௩௬௨

நற்றிககண ணேறுகொணட நறகனிவாய ஊறலிலே
சற்றுதொட் டுத்தெறித்தால் தாழவாமோ - பொற்
சேரீா பவளத் திருவாய மலாந்தொருசொல் [ றொடியீர்
தாரீாஎன தனனைத் தனிபாரீர - வாரீர்என்று

உளளம இளகி உருகுகின்ற என அளவில்
எனளளவும நெஞசம இரஙகாமல - மெளளவே ௩௬௫

இத்தனைநே ரநதனியே யானுரைககும விண்ணப்பம்
அத்தனையும கேடடுஙகே ளாதவர்போல் - கொத்துமலர்

பூடடுசிலை மாரன் பொரநிறகி றானஎனறு
காட்டுதல்போல் சற்றே கடைககணித்து - கேட்டுமிக

வினமுறுவல் செயது விளையாடித தமமிலே
புன்முறுவல் செயதருளிப போயினர் - மனமதனும

**போனபின் தடுமாற்றம்**

வெஙகாதல் பூணும வெகுரா ஜதநடையும
சிஙகாரப் பினனழகும சேவித்தேன - மஙகைநல்லார

மண்ணிலே தோயஅடி வைத்தசுவடு அததனையும்
கண்ணிலே ஒற்றிஒறறிக காமுறறேன - ஒண்டு
[ தலாள ௩௭௦

---

௩௬௨. நறறி : நத்தி. கண்ணேறுகொண்ட என் மீது பாலொடு தேன கலநத நறகனிவாய ஊறலில் கொஞசம தொட்டுத தெறித்தால் ஒன்றும் குறைவந்து விடாது.

௩௬௭. கடைக கணிதது : கடைக கண்ணால் பார்தது.

௩௬௮. வின முறுவல் : ஒளிச சிரிபபு.

௩௬௯. வெங்காதல் : விருபபக காதல். வெகுராஜத நடை. நேர்த்தியான ராஜநடை. சேவித்தேன். வணங்கினேன்.

௩௭௦. தோய : படிய. சுவடு : அடையாளம்.

நின்ற நிலேயும நெறித்தபுரு வககடையும
மன்றல்அள கமசெறிந்த மாலேயும-பொனறளேப ௩௭௧
பார்த்தபார் வைககுள பசப்பும பசுந்தோளில்
போர்த்தபோா வைக்கடஙகாப பூண்முலேயும-சாத்தவரை
வாட்டுகினற செந்தா மரைமுகமும கஸதூரிக்
கோட்டு நுதலிற் குறுவேர்வும - தோட்டுமலர்ப்
பூஙகாவில் வந்த புதுமையுமஎன் கண்ணேவிட்டு
நீங்காமல் உள்ளறிவு நீஙகினேன் - ஓங்குதுயர்
கொண்டேன விணேயேன் கொடிஇடமாய் வந்தபலன
கண்டேன இதயம கலஙகினேன் - அண்டிஎதிர் ௩௭௫
காணத் தவமசெயத கணபோல்மற் றைமபொறியும
பேணத் தவம்செய்யப பெறறிலேன் - நாண்அழுகு
குனறினேன ஆண்மை குலேந்தேன துணே இழந்த
அன்றில்போல வாடினேன் அவ்வளவில் - ஒனறியாப்
பித்தன்இவன் எனறெனக்கோா பேருணடே ஆதலினல்
நிததனிவன என்று நினேவுறறுச்-சித்தசனதான ௩௭௮

---

௩௭௧. மனறல்: மணம. அளகம: கூந்தல். பொனற: உருககுலேய.

௩௭௨. பூண: ஆபரணம.

௩௭௩. கஸ்தூரிக் கோடடுநுதல்: கஸதூரியைக் கோடாகப் போடபபட்ட நெறறி. குறு வேர்வு: சிறு வியர்வை. தோடு: இதழ்.

௩௭௫. கொடி: காககை. அது இடமாக வருதல் நல்ல சகுனமல்ல எனபார்கள.

௩௭௬. காணக கணகள செயத தவத்தை மற்றைப பொறிகள் செய்யவில்லே. நாண: நாணம.

௩௭௭. அன்றில்: ஆணும பெணணும இணேபிரியா மல் வாழும் பறவை இனம.

௩௭௮. நித்தன் - சிவபெருமான்.

தண்டா நுதல்விழியாள் தான்பட்ட கண்கலக்கம
உண்டான எல்லாம உளத்தெண்ணித் - தெண்டிரைசூழ

துஙக உலகில் சுருமபைஎல்லாம நாணுககிச
செங்கருமபை எல்லாம சிலையாக்கி - வெங்கலக ௩அ௦
மாகவனத் தோடே வளருமசு சோகமெலாம
சேர்ாகவன மாகத் துணாபறித்துச் - சேகரித்து

முல்லைஎனும பேரின முழஙகிசையும பூமியுமவிட்டு
எல்லையிற்பூ எல்லாம எடுத்தேந்தித் - தொல்அயனுககு
உந்திக் கமலமலர் ஒன்றளிததுச் செந்திருவை
வந்திக்கு நாகையர்கோன மார்பிருத்திச் - சந்திக்கும்

கோகனகம் உளளஎலாம் கொயதிரதி கண்போல்வ
ஆகுமலர் மாவின அலாபறித்து - வாகையிறபோா

ஆடிவிஜ யமபுணைய அமபாக்கித் தான்அந்த
கோடியுறு ரூபம கொண்டெய்தி - நீடுலகில் ௩அ௫
ஒபபுருப பாவி உடலந் தனைத் தனக்கோர்
அபபருத தூணிநிகர் ஆக்கினன் - மெயபபடவே ௩அ௬

---

௩எ௯. தண்டா : குறையாத. நுதல் விழி : நெற்றிக் கண். தெள திரை : தெளிந்த கடல்.

௩அ௦: சுரும்பு : வண்டு. நாண் : விற் கயிறு. சிலை : வில்.

௩அக. துணா : பூச்கொத்து.

௩அ௨. தொல் அயன் : பழைய பிரமன்.

௩அ௩. வந்திக்கும : வணங்கத்தக்க. இருத்தி : இருக்கச் செய்து.

௩அ௪. கோகனகம : தாமரை. இரதி : மன்மதன் காதலி. மாவின அலா : மாம்பூ. வாகை : வெற்றி.

௩அ௫. அனந்த கோடி ரூபம் : பல கோடி வடிவம்.

௩அ௬. ஒப்பு உருப பாவி. ஈடில்லாத பாவி. உடலந்தனை : என் உடமபினை. அப்பு அருத் தூணி: அம்புகள நீஙகாத கூடு.

நொந்தேன பரதவித்தேன் நோக்கினகா மாககினியால்
வெந்தேன்உள ஆவி வெதும்பினேனை-நைநதேன் - ௩அஎ

விழுந்தேன அயர்ந்தேன் மெலிந்தேன நினைவும்
அழிந்தேன் பரவசமே ஆனேன - செழுஙகபட

**கனவிற் காணுதல்**

நெஞசிற் கருணையில்லா நிஷ்டுரி யார்தமமை
வஞசக் கனவில் வரக்கண்டேன் - செஞசிலமபு

கொண்டஇரு தாள்மலரைக் குமபிட்டேன் வெயயோனைக்
கண்டகம லமபோல் களிகூர்ந்தேன-தெண திரைசூழ

நீதியுல கந்தனிலே நிட்சேபங் கண்டெடுத்த
ஆதுலர்போல் பேருவகை ஆயினேன் - தீதில்நெறி

சேரும் வருணகுலா தித்தனையே சேர்ந்துகளி
கூருமஅவர்போல் குறைவறறேன் - ஆரத்தின்

வணடல்அணி கொஙகைகளை வாழ்த்தினேன மஙகை
[நல்லார்
கெண்டை இணைவிழியைக் கீாத்தித்தேன-அண்டையிலே

சென்றேன் பராமுகமோ தேவரீர் விணணபபம
ஒனறே அதுகேட்க ஒண்ணுதோ - இனறுமைநான ௩௯௪

௩அஎ. காமாககினி : ஆசை நெருப்பு.

௩அஅ. பரவசம ஆதல் : தன வசம இழந்து பிறர் வழி ஆதல்.

௩அ௯. நிஷ்டுரியார : கொடுமையானவர்.

௩௯௦. வெயயோன : ஆதவன.

௩௯௧. நிட்சேபம : புதையல். ஆதுலா : வறுமை யாளர். உவகை : களிப்பு.

௩௯௨. ஆரம : சந்தனம.

௩௯௩. வணடல் : குழம்பு. கெண்டை : மீன் வகை. இணை : இரணடு. அண்டை : சமீபம.

௩௯௪. விண்ணபபம ஒனறே : வேண்டுகோள ஒன்றுதான. ஒண்ணுதோ : கூடாதா.

சற்றே ஒருவார்த்தை சம்பாஷித் துக்கொள்ளப
பறறேனே சொல்லீர் பனிமொழியீர் - பொற்
[றொடியீர் ௩௯௫
என்னே ரழமேநீர் எவினது கேட்டுமது
பினனே திரிந்து பிழையேனே - என்னுடைய
மேதகைய நெஞ்சின் விழிவேல் விளைத்துவரும
காதல நிறைக்கும களஞ்சியமே - சூதுபயில்
சேல்இலங்கு கண்மடவீர் செப்பீர் திறநதேஓர்
கால்எளிமை வேணடாவோ காரிகையீர் - ஏலமலர்
ஏரிலஙகு பூஙகுழலீர் எனஅருமை என்பெருமை
ஆரறிவார் நீரறிவ தல்லாமல் - நிரைத்
தெளிததாலும ஆருச செழுங்காமச செந்தீ
அளித்தால் வலக்காரம ஆமோ - களிக்கும
தவலோ கருமபஙகும தாம நகையீர
துவலோ துவலொனறும சொல்லீர் - நவமாழ ௪௦௧

௩௯௫. பனிமொழி : குளிர்ந்த பேசசு. பொற்றொடி. தஙக வளையல்.

௩௯௭. நெஞசின : நெஞசிலே. விழி வேல் : கண்ணாகிய வேலாயுதம.

௩௯௮. சேல : மீன. திறந்து : வாய் திறந்து. ஓர் கால் : ஒரு முறை. ஏலம : வாசனை.

௩௯௯. ஏர : அழகு.

௪௦௦. வலககாரம : வெறறி.

௪௦௧. தவலோகர : தவ உலகில் வாழுவார. தாமம் : ஒளி. துவலோ துவல் : சாதலோ சாதல; நான சாக வேணடியதுதானோ? "காதல் போயிற சாதல" நவம் : புதுமை.

விழிபாய வேநொந்தேன மெல்லிநல்லீர் உந்திச்
சுழிபாயவேன் என்றுதுதி சொனனேன் - தழுவும ௪௦௨
பொருவாள விழியாரப் போதுமுகம பாாததுத்
திருவாய் மலர்ந்துநகை செய்தாா ; பெரிதிஙகு

**கனவில் அனுபவித்தல்**

இதுவே தருணம்என எண்ணிஇடம தேடி
மதுவேறு பூங்கா வனத்தில் - உதவியதோர்
வானை மணிவசந்த மணடபததிற பூஙகமுகின
பாளை மணங்கமழும பந்தரிட்டு - நீள ௪௦௫
எடுத்து வகையான எல்லையிலா மாலை
தொடுத்துச சிலபூச் சொரிநது - விடுத்ததிலே
பாயல் படுத்துப் பரிமளப்பூ மெத்தையின்மேல்
ஆய விரித்ததனமேல் ஆஙகவரை - சேயபதம
கனறுமல் கொண்டேற்றிக் கைகட்டி வாய்புதைத்து
நினறேன் இருதாளை நீட்டினர் - சென்றந்தக்
கால்கொணடு பற்றிஇரு கையாரத் தீண்டிஅணை
மேல்கொண்டு நானுமங்கு மேவினேனன - மால்கொண்ட

௪௦௨. பொரு : போர்வல்ல. அப்போது : அத் தருணம்.

௪௦௪ மது ஏறு : தேனபெருகும.

௪௦௫. வானை மணி வசந்த மணடபம் : வாளை மீன துளளும நீர்நிலை சூழநத அழகிய இளவேனில் மாளிகை. கமுகு : பாக்கு. பந்தர் : காவணம.

௪௦௭. பாயல் படுத்து : படுக்கை செய்து. ஆய: காமபரிந்த மலர். சேயபதம : சிவந்த திருவடி.

௪௦௮. கன்றுமல் : சுவடுபடாமல். இருதாளை : கால்கள இரண்டையும.

௪௦௯. அணை : படுககை. மால் : மயககம்.

மைகுழலை நீவி வகிர்ந்து வகிர்ந்ததிலே
தக்கமது மாலையெலாம் சாத்தினேன - மிக்கபனி சகo
நீரில குழைத்த நிறககுங குமக்குழமபைப
பூரித்த கொஙகைகளிற் பூசினேன - வேரிமலர்
இறபூவை அனனுர்க்கு இதவியகாய்ச் சுண்டையுடன்
கற்பூர தாமபூலம் கைகொடுத்தேன - அற்புதமாம
பாதிச சுருளனகருப பாலித்து அமிர்தநிலை
சோதிகக லீலை தொடஙகினுர் - சீதமலர்
மட்டிலே தோய்குழலார் மாமே கலைநெகிழத்த
மட்டிலே என்னை மறந்தேனயான் - கடிமலர்க்
கைக்குளணைத் துககரணக் கட்டளைவட் டத்துறையுள்
புகெகொருமித் தெட்டுவகைப புட்குரலிட்டு - ஒக்களடுத்து
அபபுறமுற றிபபுறமுற் றற்புவினைத் துபபரிவைச
செபபிநகத் திறகுறியைச சிககெனவைத்து-ஒபபில்எழில்
பற்குறிஇட் டுககருணைப பத்மமுகப் பொற்பொளிரப
பொறகுவடொத் துபபுணரப புத்தமிர்தத - திற்குலவிச்

---

சகo. மைகுழலை : இருண்ட கூந்தலை. நீவி : தடவி. வகிர்ந்து : வகுபபெடுத்து. மதுமாலை : தேன் ஒழுகும ஆரம.

சகக. பூரித்த : பருத்த. வேரி : தேன.

சகஉ. இல்பூவை : வீடாகக்கொண்ட மஙகை. இதவிய : நலமான. காய்ச்சுண்டை : காசுககட்டி.

சகங. பாதிச் சுருள் : கொடுத்ததிலே பாதி வெற்றிலைச் சுருள. பாலித்து : கொடுத்து.

சகச. மட்டு : தேன. மாமேகலை : மகிமை வாய்ந்த ஆடை. மட்டிலே. அளவிலே.

சகரு. புட்குரல். : பறவை ஒலி.

சகசு. அறபு : அனபு.

சகஎ. பத்மம : தாமரை. பொறகுவடு : பொன் மலை.

சுறறிலகிச சுற்றிறுகி சகரதலத்து துகளுளிலக
கற்றுமதாத்து ஒத்ததனக கச்சவிழப - பொறபு ௪௧௮
மிகுத்த முலைககண விரல்கொணடு அதுக்கி
நகததின் உறுத்தி நகைதது - முகத்தை
முகததில் அழுத்தி முயக்கி மயக்கி
மிகுத்த நலததை விளைததுச - சுகத்தில் ௪௨௦
அரத்த நிகர்அதரத்தை எயிறறில்
இருததி அருததி இசைததுக் - கழுத்தில்இசை
உறறகரணததில்ஒருவாககொருவர் ஒத்துவகை
பெறறதில அடிககடி பிணககுவர - நறறுயிலில்
மைததிலக நெற்றிபுரு வக்கடைநெறிப்புவர
உயத்திடுக ழுதததொடுகை உடபுகுத - மெததிய
கொநதள பநதி குலைநது சரிந்திட
வநது சுருமபர வஞசெய - முந்திய
செஞசர ணஙகள சிலமபு புலமபிட
வஞ்சி மருஙகுல் வளைந்திட - அஞ்சொலுடன ௪௨௫
நெஞசமும ஒனறி நிரமபிய சஙகிசை
கொஞச இரண்டுகை குமபிட - விஞசிய ௪௨௬

---

௪௧௮. கச்சு : ரவிக்கை.

௪௨௧. அரத்தம நிகா அதரம்: ரததமபோற சிவநத உதடு. எயிறு : பல. அருததி : உணணச செயது.

௪௨௨. கரணம : கலவி. பிணககு : ஊடல்.

௪௨௩. மைத் திலகம : கறுபபுப பொட்டு.

௪௨௪. கொநதள பந்தி : பூங்கொததணிந்த கூந்தல வரிசை. சுரும்பு அரவம செய : வண்டு ஓலமிட.

௪௨௫. சரணஙகள : அடிகள. சிலமபு : நூபுரம. மருஙகுல் : இடுப்பு.

ஆவிஒன்ற ஆகம்ஒன்ற ஆசைஒன்ற நேசமஒன்ற
மேவுபஞ்ச பாணதுங்கன் வீறடங்க - வாவும்இன்ப ௨௨௭

மேலணிந்த பூண்மழுங்க மேனிஎங்கும் வேர்வரும்ப
நீலமன்றல் வீசுமுந்தி நீரததும்பக் - கோலமிகும்

மொய்அகலம மேலிட்ட முத்து வடஞ்சிதறத்
துய்யதிரு மேனி துவட்சிதர - மெய்யுறநான்

ஆரமதன் நூலில் அறிந்தறியாச சந்தேகம
சேர அடைவே தெளிவித்துக் - காரிகையார் ௨௩௦

தந்த அநுராக சமபோகம கொண்டாடி
இந்த்ரபதம பெற்றவர்போல் இன்புற்றுச் - சிந்தை

தனைவென்று வாட்கண் தருங்கனவைக் காம
வினையென் றறியேன விழித்தேன் - நனைகமழும

**கண் விழித்தபின் புலம்பல்**

சோலையெல்லாம தேடினேன சுற்றினேன காணுமல்
மாலையெல்லாம கொண்டு வருந்தினேன - பாலனையார்

அப்போது சென்றஅடி அல்லாமல் பார்த்தளவில்
இப்போது சென்றஅடி யானகாணேன் - மெய்ப்பட்டநான்

---

௨௨௭. ஆவி : உயிர். ஆகம : உடல். ஒன்ற : ஒரு சேர. பஞ்சபாண துங்கன : ஐந்தமபு மதன. வீறு ; பெருமை.

௨௨௯. மொய : வண்டு மலருக்காக மொய்க்கின்ற. அகலம : மார்பு.

௨௩௦. ஆர : நிறைய. அடைவே : முறையாக.

௨௩௧. அநுராக சமபோகம : ஆசைப புணர்ச்சி. இந்த்ர பதம் : தேவேந்திர பதவி.

௨௩௨. நனை : தேன.

காணவே முந்திக் கனவென்று அறிந்தக்கால்
விணிலே ஓடி விழிப்பேனோ - பேணி ௪௩௫
அறிவுக்கு இனியார் அகலாமல் கையால்
இறுகத் தழுவி இரேனோ - நறுநுதலார்
சீருந் கொங்கையையென் செவ்வாயி னாற்பற்றி
ஆரமுதம் உண்டுபராக் காகேனோ - காரிகையார்
ஏயத் தனியே எழுந்தருள இன்னும் அந்த
மாயத் துயில்எனக்கு வாராதோ - நேயமுடன்
மெத்தெனவே நீங்கி விழித்ததுவும் பேசுவதும்
இத்தனையு மோகனவென் றேயறியேன் - சத்தியமே
என்று வருந்தி எரியும் கனல்வாயில்
ஒன்றும் மெழுகாய உருகினேன் - மன்றல்அணி ௪௪௦
பாயலிலே சற்றே பரிசித்த மாத்திரத்தில்
ஆயிரம்நாள் கூடினர்போல் ஆயினேன் - சேயிழையார்
அன்பும் பெருநலனும் அந்தரங்க மும்பெருக
இன்பம் பெரிதாய் இருந்ததுவும் - துன்பம்
அனைத்தும் தவிர்ப்பவர்போல ஆட்கொண் டதுவும்
நினைத்துநெடு மூச்செறிந்து நின்றேன் - வினைக்கலகக்
கோபமத னாலே குறையுயிரும் கொள்ளைகொள்ளும்
சாபமத னாலே தயங்கினேன் - சோபமனத்
தொந்த மதியால் தொடர்ந்துபோ தாக்குறைக்கு
வந்தமதி காய மதியழிந்தேன் - சந்ததமும் ௪௪௫

௪௩௭. பராக் ஆதல்: ஜாக்கிரதையாக இருத்தல்.

௪௪௦. கனல்: நெருப்பு. ஒன்றும் மெழுகாய: பொருந்திய மெழுகு போல.

௪௪௪. சாபம்: வில்.

௪௪௫. தொந்தம: தொடர்பு. மதி: மதிக்கத் தக்க இனிமை. மதி: சந்திரன் மதி: புத்தி.

அண்டர் குறைத்தமரம் ஆனேன் அடல்வேழம்
உண்ட விளங்கனிபோல் உள்ளுடைந்தேன் - அண்டிவரும்
திவாடை யாலே தியங்கினேன் பார்மடந்தை
மாவாடை யாலே மயங்கினேன் - காவில்
செழுந்தென்றல் ஊடாடச் செந்தி வடவைக்
கொழுந்தென்றலாலே குறைந்தேன் - தொழுந்தகைய
காளகண்ட வாளவிழியார் கட்டுரைக்கேளாச்செவியில்
காளகண்ட ஓசைபுக்கக் கன்றினேன் - மேளமிகும்
தந்திமருப் பென்னும் தடமுலையார் காரளக
பந்திமழை காணப் பயிரானேன் - முந்தி அருள் ௪௫௦
தாவிப் பொழியுருக்கச் சந்த்ரோதயங் காண
வாவிக் குமுத மலரானேன் - பாவியேன்
புண்ணான நெஞ்சுதனிற் பொங்காரம் விட்டாரக்
கண்ணால் ஒருவரையும் காணகிலேன் - எண்ணில்
விரகாதி மோக விளைவாங் கடலின்
கரையேறுகின்றவழி காணேன் - உருகிமனம் ௪௫௩

---

௪௪௬. அண்டர் : பகைவர். குறைத்த : வெட்டிய. வேழம் : விளாம்பழத்தைப் பற்றும் ஒரு நோய். அப்பிணி பெற்ற விளங்கனி வெறுங் கூடாக இருக்கும்.

௪௪௯. காள கண்ட வாளவிழியார் : நஞ்சைத் தொண்டையிலே பெற்ற வாள் போன்ற கண்ணார். காளகண்டம் : குயில். கன்றினேன் : துயருழந்தேன். மேளம் : உணவு.

௪௫௦. தந்தி : யானை. மருப்பு : தந்தம். கார் அளக பந்தி : கரிய கூந்தல் நிரை.

௪௫௧. வாவி : தடாகம். குமுதம் : சந்திரனைக் கண்டு மலரும் மலர்.

௪௫௨. பொங்காரம் : பெருந் துக்கம். எண் இல் : கணக்கில்லாத.

பேராசை கொண்டேன் பிழைக்கும் பொருட்டாகச்
சோராது ஒருநினைவு தோன்றிற்று - நேராகக் ௪௫௪

**மடல் ஊர நினைதல்**

காமம் உழந்து கலங்கி வருந்தினார்க்கு
ஏமம் மடலல்ல தில்லைவலி - ஆமெனவே ௪௫௫
சொன்னதிரு வள்ளுவரைத் தோத்திரம்செய் தேன (கருத்தில்
உன்னிமடல் ஊர்தற்கு ஒருமித்தேன - வன்னநறுந்
தாதளவும் செய்ய இதழ்த் தாமரைப்பூங் கண்ணனைக்
காதலொடும் தாவடிபோம் கண்ணனை - சீதமுலைச்
சூதாரை எல்லையற்ற சூதாரை வள்ளலெனும்
காதாரைச் சற்றுமிரங் காதாரை - போதாகம்
செய்யாரை மிக்கமறம் செய்தாரைக் காந்தளெனும்
கையாரை என்னளவிற் கைத்தாரை - வெய்யமயல்
தந்தாரைப் பூங்குழலின் தாராரை மாலளிக்க
வந்தாரைக் கொங்கையின்மேல் வாராரை - சிந்தைவெறும்

---

௪௫௫. "காமம் உழந்து வருந்தினார்க் கேமம், மடலல்ல தில்லை வலி" என்பது குறள். காமத்தினால் தாக்கப்பட்டுத் துன்பம் எய்தினார்க்கு மடல்ஊர்தல் தவிர வேறு வலி இல்லை.

௪௫௬. ஒருமித்தேன : தீர்மானித்தேன.

௪௫௭. தாது : மகரந்தப் பொடி.

௪௫௮. சூது : சூதாடுகாய். சூது : வஞ்சனை. போதாகம் : போத அகம், வரமணம்.

௪௫௯. மிக்க மறம் : பெருங்கொடுமை. கைத்தார் : கசந்தார். வெய்ய மயல் : கடும் மயக்கம்.

௪௬௦. தாரார் : மாலையை அணிந்தவர். மால் அளிக்க : மயக்கம் தர. வாரார் : ரவிக்கை அணிந்தவர். வெறும் : ஒன்றுமற்ற.

கல்லாரை மலாமத நூல் கறறுரை மைப்புருவ
வில்லாரை ஏழுலகும விற்பாரை - நல்லபடந சசுக

## மடற்கோலம்

தன்னிலவர் வனநெஞ்சம தாஞெழிய மங்கைநல்லார்
என்னும படிவம எடுத்தெழுதிப - பினனர்

சடைகட்டி வெண்ணீறு சாததிநறும பூளைத்
தொடைகட்டி வெள எருககுச சூடி - உடல்கருக

நெஞசதிர அன்றெரித்த நித்தனிவன என்றுமலர்ப்
பஞசசர வேளும் பயப்படவே - விஞசமுதச

செமபவள வாயார் திருவேளைக் காரனென
அமபொன்நெடுங காகளஙகள் ஆர்ப்பவே-கும்பமுனி

சொற்றகைமை மால்விளக்கும தொல்காபபியந்
[,தெளிந்தே
உறறபெரி யோர்நாறபத் தொன்பதின்மா - நற்றமிழநூல்

சேரும வருணகுலா தித்தன செழுங்கனகத்
தாருவெனும கோனே தருமனஅருள் - பேரறஞசோ

---

சசுக. கல்லாா : கல்லைப போனற கடினமானவா. ஏழுலகும விற்பாரை : எல்லா உலகஙகளையும் விற்றுக் கொள்ளத் தகக எழில பெறறுரை.

சசுஉ. பூளைத் தொடை : இலவமபஞசு மாலை. வெள எருககு : வெளளை எருககம பூ.

சசுங. அன்று எரித்த நித்தன: அநநாள் எரித்துச் சாமபலாககிய சிவன. மலாபபஞச சர வேள : ஐந்து பூஙகணை மாரன. பயபபட : நடுநடுஙக. விஞ்சு : மேமபட்ட.

சசுரு. வேளைக்காரன : காலக் கடவுள. காகளங்கள- வெற்றிச்சின்னஙகள். ஆர்பப : ஒபதிகக. கும்ப முனி : அகத்தியன்.

சசுசு. சொல் தகைமை மால் விளக்கும தொல் காபபியம் : சொல்லாகிய தகுதியிலஉள்ள மயக்கத்தை விளககிச் சொன்ன தொலகாபபிய நூல். நாற்பத் தொனபதின்மா : சஙகப் புலவர்கள்.

சசுஎ. செழும கனகத்தாரு: செழுமையான தங்கமரம்.

ஆத்தான போஜன அனங்கவே ளைத்துறந்தோன்
நாத்தான் இரண்டுரையா நாகரிகன் - காத்தான் சகூஅ

அருணமலர் மாதுபுணா அச்சுத ராய
வருணகுலா தித்தன் மகிழத் - தருணமயல்

தீரவேன் பலாகாணத் தென்நாகை வீதியிற்சென்று
ஊர்வேன பணிமா உகந்து. சஎ0

வருண குலாதித்தன் மடல் முற்றும்.

---

சகூஅ. ஆத்தான போஜன்: ராஜசபைககு ஏற்ற வன். அனங்கவேளைத் துறந்தோன்: காமனை வென்ற வன். நாத்தான் இரண்டு உரையா நாகரிகன்: இரண்டு பேச்சு அவனிடம இல்லை. அவன நா மாறாது; அவ வளவு நாகரிகமானவன. யார்? காத்தான் தான.

சகூகூ. அருணமலா மாது: செந்தாமரை வாழ திரு. புணா: அவள சேர்க்கை பெற்ற அச்சுதராயனாகிய வருண குலாதித்தன. தருண மயல்: சமயத்தில் பெறற மயல்.

சஎ0. தீர்வேன்: தீர்கின்றேன. பலா காண: பலரும அறியும்படி. தென நாகை வீதியில் சென்று: தென பாலுள்ள நாகை நகர் தெருவிலே போய். ஊர்வேன்: செலுத்துவேன. பணிமா: பலாஙகருக்கா் ஆய குதிரையை. உகந்து: மகிழ்ச்சியோடு.

★

# கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது

சேதுபதி விறலி விடு தூது ஒன்று ஏற்கனவே வெளியிடப் பெற்றது. அதன் ஆசிரியர் சதாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர். இப்போது, கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது குறிப்புரையுடன் தயாராகிக் கொண்டிருக்கிறது. பிரசித்தி பெற்ற கூளப்ப நாயக்கனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு ஆக்கப்பட்டது இந்நூல். இதன் ஆசிரியர் வாக்கு வன்மை மிக்க சுப்ரதீபக் கவிராயர்.

விறலி விடு தூதுகளுள், மேற்பட்டது இந்நூல். தேனென இனிக்கும் வாக்கு.

பதிப்பாசிரியர்
ராய. சொ.

**விலை ரூ. உ-அ-௦**

★

## ஆசிரியரின் வேறு நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| காந்தியும் வள்ளுவரும் | .... | 1 | 8 | 0 |
| சேதுபதி விறலி விடு தூது | .... | 2 | 8 | 0 |
| காதற் பாட்டு | .... | 3 | 0 | 0 |
| வள்ளுவர் தந்த இன்பம் | .... | 3 | 0 | 0 |
| குற்றால வளம் | .... | 2 | 0 | 0 |
| காவேரி | .... | 1 | 0 | 0 |
| காந்தி பா மாலை | .... | 3 | 0 | 0 |
| தாலாட்டும் கும்மியும் | .... | 0 | 4 | 0 |
| காதற் கடிதங்கள் | (அச்சில்) | | | |
| இன்பம் எது? | ,, | | | |

கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது (அச்சில்)